பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10,00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஐப்பசி 30 திங்கட்கிழமை (15-11-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:356

# இராணுவ பவுஸர் மோதி இளைஞர் துடிதுடித்துப் பலி! ஆத்திரமடைந்த மக்கள் பவுஸரைக் கொளுத்த முயற்சி!!

## கொடிகாமம் அருகே பெரும் களேபரம்

யாழ்ப்பாணம்,நவ.15

கண்டி வீதியில் கொடிகாமத்துக்கு அருகே உள்ள இராமாவில் கோயில் அருகே இராணுவத் தண்ணீர் பவுஸர் வாகனம் மோதியதில் இளைஞர் ஒருவர் அந்த இடத்திலேயே துடிதுடித்துப் பலியானார். இதனால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் இராணுவ பவுஸருக்குத் தீ மூட்டினர். இதை அடுத்து அப்பகுதியில் பெரும் களேபரம் ஏற்பட்டது. பொலீஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளைப் பிரயோகித்தும், தடியடி நடத்தியும் அங்கு கூடியிருந்த கூட்டத்தைக் கலைத்தனர். இதனால், 10 பேர் காயமடைந்தனர்.

யாழ்ப்பாணம், கல்வியங்காடு வீரபத்திரர் கோயில் அர்ச்சகரான சிவஸ்ரீ வரதராஜக் குருக்களின் இளைய மகனான அரிஹரசர்மா(வயது 24) என்ற இளைஞரே இந்த விபத்தில் உயிரிழந்தவராவார். பவுஸர் சில்லு அவருக்கு மேல் ஏறிச்சென்றதனால் உடல் சிதறி அந்த இடத்திலேயே அவர் பலியானார்.

கொழும்புக்குச் சென்ற தனது மூத்த சகோதரனை 'பஷன்' மோட்டார் சைக்கிளில் ஏற்றி வந்து முகமாலையில் இறக்கிவிட்டுக் காலை 8.30 மணியளவில் அவர் திரும்பிக்கொண்டிருக்கையில் இந்தப் பரிதாபகரமான சம்பவம் இடம்பெற்றுள்ளது. கொடிகாமம் சந்தி தாண்டி யாழ்ப்பாணம் விரைந்துகொண்டிருந்த அரிஹரசர்மாவின் மோட்டார் சைக்கிளை இராணுவ பவுஸர் ஒன்று முந்திச் சென்றுள்ளது.

இராமாவில் கோயிலடியில் அந்த பவுஸர் எந்தவித சமிக்ஞையுமின்றித் திடீரென குறுக்குப்பாதை ஒன்றுக்குத் திரும்பியுள்ளது. அந்தப் பகுதியில்தான் இராணுவத்தின் 53 ஆவது பிரிவின் பிரதான தளம் ஒன்று உள்ளது.

"இராணுவ பவுஸரின் இந்த சடுதியான திருப்பலால் நிலைகுலைந்த அரிஹரசர்மாவின் மோட்டார் சைக்கிள் பவுஸருடன் மோதியுள்ளது. மோதிய வேகத்தில் அவர் மோட்டார் சைக்கிளிலிருந்து தூக்கி வீசப்பட்டுள்ளார். அவரின் மீது பவுஸரின் சில்லு ஏறிச்சென்றுள்ளது. சர்மாவின் உடல் வீதியின் இடதுபுறம்

(16ஆம் பக்கம் பார்க்க)

## பத்திரிகையாளர் தாக்கப்பட்டதை வன்மையாகக் கண்டிக்கிறது சங்கம்

யாழ்ப்பாணம்,நவ.15

இராணுவ பவுஸர் மோதி இளைஞர் பலியான சம்பவம் தொடர்பான செய்திகள் சேகரிக்கச் சென்ற பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டதை வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இதுவிடயமாக மேற்படி சங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

பத்திரிகைச் சுதந்திரத்தைப் பேணிப்பாது

(16ஆம் பக்கம் பார்க்க)

### இனப்பிரச்சினை தொடர்பான

# கூட்டமைப்பு அரசின் கொள்கையை பிரகடனப்படுத்த புலிகள் கோரிக்கை

## இதுவே அவர்கள் சமர்ப்பித்த புதிய ஆலோசனை ஆனால் ஜனாதிபதியிடமிருந்து பதிலேதும் இல்லை

கொழும்பு,நவம்பர்15

**ஜனாதிபதியோடு தனித்துப் பேசுவதில் அர்த்தமில்லை. அரசுடன்தான் பேசவேண்டும். எனவே, பல்வேறு கட்சிகளைக் கொண்ட சாம்பார் கூட்டமைப்பான மக்கள் ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் நிலைப்பாடு - கொள்கை - தெளிவுபடுத்தப்படவேண்டும். ஆகையால் இனப்பிரச்சினைக்கான அமைதி முயற்சிகளை முன்நகர்த்துவதற்கு வசதியாக அந்த விவகாரம் தொடர்பான அரசின் கொள்கை நிலைப்பாட்டை முதலில் பிரகடனப்படுத்தும்படி கூறுங்கள்.**

**- இப்படி கிளிநொச்சியில் தம்மைச் சந்தித்த நோர்வே அனுசரணையாளர்களிடம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் வேண்டுகோள் விடுத்தார்.**

**அதுவே, அமைதி முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு புலிகள் முன்வைத்த புதிய கருத்து நிலைப்பாடு (Formula) எனக் கூறப்படுகின்றது. ஆனால், இக்கோரிக்கை தொடர்பாக ஜனாதிபதி இன்னும் பதிலேதும் தெரிவிக்கவில்லை எனத் தெரியவருகின்றது.**

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் தலைமையிலான நோர்வே அனுசரணைக் குழுவினர் கடந்த வாரம் இலங்கை வந்திருந்தனர்.

அவர்களின் வருகையை அடுத்து அமைதி முயற்சிகளில் ஆக்கபூர்வமான திருப்பம் ஏற்படும் எனப் பலரும் எதிர்பார்த்தனர். ஆனால், அது பொய்த்துப்போய்விட்டது.

பீற்றர்ஸன் குழுவினர் வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனையும் சந்தித்துப் பேசினர்.

அச்சமயம் அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்கு வகைசெய்யும் விதத்தில் ஜனாதிபதியிடமிருந்து செய்தி ஒன்றை நோர்வே வெளிவிவகார அமைச்சர் எடுத்து வந்து புலிகளின் தலைவரிடம் கையளிப்பார் என எதிர்பார்க்கப்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு ஆளுநராக டிரோன் பெர்னாண்டோ?

கொழும்பு,நவ.15

வடக்கு - கிழக்கு மாகாண புதிய ஆளுநராக முன்னாள் ஐ.தே.முன்னணி அரசின் வெளிவிவகார அமைச்சராக இருந்த டிரோன் பெர்னாண்டோ நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு - கிழக்கு ஆளுநராக இருந்த மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டதைடுத்து வெற்றிடமாகியுள்ள பதவிக்கே டிரோன் நியமிக்கப்படவுள்ளார்.

எதிர்வரும் முதலாம் திகதி அசோக ஜெயவர்த்தன தனது புதிய பதவியைப் பொறுப்பேற்றுக் கொள்கின்றார்.

டிரோன் பெர்னாண்டோ மிக நீண்ட காலமாக மொறட்டுவ தேர்தல் தொகுதியில் இருந்து ஐ.தே.கட்சியின் சார்பாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார். ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.முன்னணி அரசில் வெளிவிவகார அமைச்சராகப் பதவி வகித்தவர்.

## இடைக்கால நிர்வாகம்பற்றி அரசு பேசினால் உடனே ஜே.வி.பி. அமைச்சர்கள் ராஜினாமா!

கொழும்பு,நவ.15

விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை அடிப்படையாகக்கொண்டு அரசு பேச்சுக்களை ஆரம்பித்தால் அடுத்த நிமிடமே ஜே.வி.பி. உறுப்பினர்கள் தமது அமைச்சுப் பதவிகளை ராஜினாமாச்செய்வர்.

- இப்படி அடித்துக் கூறுகின்றார் ஜே.வி.பி.யின் அமைச்சர் லால் காந்த.

அவர் இதுபற்றி மேலும் தெரிவித்துள்ளதாவது:

விடுதலைப் புலிகள் விரித்துள்ள வலையில் சிக்கிக்கொள்வதற்கு நாம் தயாரில்லை. அரசு அப்படியொரு முடிவை எடுக்குமானால் அடுத்த நிமிடமே எமது அமைச்சுப் பதவிகளைத் துறப்போம் என்பதை பகிரங்கமாகத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமானால் இறுதித் தீர்வை நோக்கியே செல்ல வேண்டும். இறுதித் தீர்வுபற்றி எதுவித அக்கறையும் இன்றி இடைக்காலத் தீர்வொன்றின் மூலம் பிரச்சினைக்கு முடிவுகட்ட முடியாது.

அரசின் பிரதான பங்காளிகளாக நாம் இருந்தபோதும் அரசுவிடும் தவறுகளைச் சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியாது.

ஐக்கிய தேசியக் கட்சி தோல்வி காண்ப

(16ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத் தூதுவர்களுக்கு 'தண்ணி காட்டுகிறார்' ஜனாதிபதி

கொழும்பு,நவ.15

"உலகத் தலைவர்களை வாருங்கள் என்று அழைத்து அவர்களை அலைக்கழிக்கச் செய்து இழுத்தடிக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

"அதேவேளை, இந்த அம்மையாரை நம்பி எதையுமே செய்யமுடியாது. உறுதியாகவும், தீர்க்கமாகவும் அவர் முடிவுவெடுக்கமாட்டார் எனவே, நீங்கள் திரும்பிப் போய்விடுங்கள் என்று அவர்களைத் திருப்பிஅனுப்பிவிடுகிறார் பிரபாகரன்.

"சமாதானப் பேச்சுக்களுக்கு இன்று ஏற்பட்டுள்ள நிலை இதுதான்" என்று கூறுகின்

(16ஆம் பக்கம் பார்க்க)

## தமது ஆட்சியை நீடிக்க ஜனாதிபதி முயன்றால் சிவில் சட்டமறுப்புப் போராட்டம் வெடிக்கும்!

### ஐ.தே.கட்சி எச்சரிக்கை

கொழும்பு,நவ.15

ஜனாதிபதியின் ஆட்சிக்காலம் 2005 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முடிவடைகின்றது. அதற்கு மேல் அவர் ஒரு விநாடியாவது தமது ஆட்சிக்காலத்தை நீடிக்க முயன்றால் சிவில் சட்ட மறுப்புப் போராட்டம் வெடிக்கும். நாடெங்கிலும் மக்களைத் திரட்டி வீதிமறியல் போராட்டங்களும் ஜனாதிபதி எதிர்ப்புப் பேரணிகளும் இடம்பெறும்.




சந்திரிகா அம்மையார் தானாகவே ஓடும்வரை எமது போராட்டம் தொடரும் - இப்படி ஐ.தே. கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் மாநாட்டில் முன்னாள் அமைச்சர்களான டாக்டர் ராஜித சேனாரத்ன, டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன, காமினி லொக்குகே ஆகிய மூவருமே இதனைக் கூட்டாக அறிவித்தனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு

(16ஆம் பக்கம் பார்க்க)



கொடிகாமம், ராமாவில் கோயில் அருகே நேற்று இடம பெற்ற பதற்ற நிலையின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இராணுவத்தினரின் தண்ணீர் பவுஸர் மோதியதில் இளைஞர் ஒருவர் பரிதாபகரமாகப் பலியானதை அடுத்தே இந்தப் பதற்றநிலை அங்கு உருவானது. உயிரிழந்த இளைஞரது சடலம் அருகே பொலீஸார் ஒருவர் காவலில ஈடுபட்டிருப்பதையும், இதனால் ஆத்திரமடைந்த பொது மக்கள் கண்டி வீதியில் போக்குவரத்தைத் தடைசெய்யும் வகையில் வீதியில் ரயர்களைப் போட்டு எரிப்பதையும், படையினருக்கும் திரண்டிருந்த இளைஞர்களுக்கும் இடையில் இடம்பெற்ற களேபரத்தையும் -

சம்பவத்தை அடுத்து அங்கு விஜயம் செய்த கண் காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் நிலைமையை அவதானிப் பதையும் மேற்படி இளைஞர் பயணஞ்செய்த மோட்டார் சைக்கிளையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: கொடிகாமம் செய்தியாளர் மற்றும் புஷ்பா)

# மாவீரரின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வுகள்

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கப் பிரிவிலுள்ள மாவீரர்களின் பெற் றோர்களை கௌரவிக்க நடவடிக்கை எடுத்துளளது. எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல 3 மணிக்கு சங்க மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெறும். சங்கத்தின் எல்லைக்குள் இருககும் பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை, வடலி யடைப்பு, பிரான்பற்று, பெரியவிளான், இள வாலை, மாரீசன்கூடல், முள்ளானை ஆகிய பகுதிகளிலுள்ள மாவீரர்களின் பெற்றோர்கள் தங்கள் விவரங்களைச் சங்கத்தலைமை அலு வலகத்தில் சமர்ப்பிக்கலாம் என அறிவிக்கப்பட் டுள்ளது. (எ-135)

★ ★ ★

மாவீரர் நாளையொட்டி யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச மாவீரர்களின் பெற்றோர் கௌர விப்பு நிகழ்வு எதிர்வரும் 20ஆம், 21ஆம் திகதி களில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை தேசிய எழுச்சிப் பேரவை மேற்கொண்டுள்ளது.

நல்லூர் பிரதேச மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நல்லூர் முத்துத்தம்பி வித்தி யாலயத்தில் 20 ஆம் திகதி இடம்பெறும். நல்லூர், கலாமண்டபத்தில் இருந்து 'பாண்ட்' வாத்திய இசையுடன் மாவீரரின் பெற்றோர் மேற்படி பாடசாலைக்கு அழைத்துவரப்படுவர்.

யாழ். பிரதேச மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் 21ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை இடம்பெறும்.

மாவீரரின் பெற்றோர், உரித்துடையோர் தத்தமது பிரதேச பொறுப்பாளர்கள் அல்லது தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர்களு டன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள் ளது. (10-30)

# சேறும், சகதியுமாகக் காணப்படும் பண்டத்தரிப்புப் பகுதி ஒழுங்கைகள்

வலி.தென்மேற்கு,நவ.15

தற்போது பெய்துவரும் பலத்த மழையி னால் வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டினப் பகுதியிலுள்ள பல சிறு வீதிகளும், ஒழுங்கைகளும் வெள்ளம் தேங்கி நின்று சேறும், சகதியுமாக மக்கள் போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளன.

நீண்டகாலமாகப் புனரமைப்புச் செய்யப்ப டாத வீதிகளான பண்டத்தரிப்பு புனித அந் தோனியார் வீதி, கேணிக்கட்டு வீதி, சென் மேரீஸ் வீதி, வடலியடைப்பு நல்லுணி வீதி, பிள்ளையார் கோயில் வீதி, இந்துக் கல்லூரி வீதி, அம்மன் வீதியின் ஒரு பகுதி வீதி, செட்டி குறிச்சி வீதி ஆகிய வீதிகள் உட்பட மற்றும் பல வீதிகள் சேறும், சகதியும் வெள்ள முமாக இருந்து வருவதாக மக்கள் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, பண்டத்தரிப்பு கீரிமலை வீதியில் உள்ள வெள்ள நீர் வழிந்தோடும் வாய்க்கால் நீண்டகாலமாகப் புனரமைப்புச் செய்யப்படாதிருப்பதால் வெள்ளம் ஓடமுடியாது இப்பகுதி வீட்டு வளவுகளில் தேங்கிநிற் கின்றது.

இந்த வாய்க்காலில் சிறு பற்றைகள், பூண்டுகள் வளர்ந்துள்ளதால் வெள்ளம் ஓட முடியாதுள்ளது. இவற்றைத் துப்புரவு செய் வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண் டும் என்று இப்பகுதி மக்கள் வலி. தென் மேற்குப் பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகப் பொறுப்பதிகாரியிடம் நேரிலும், கடித மூலமும் வேண்டுகோள் விடுத் துள்ளனர். (எ-135)

# மூதாட்டி கொலை வழக்கு வளர்ப்பு மகன் கைது !

கோண்டாவில் கிழக்குப் பகுதியில் தனிமை யில் வசித்து வந்த வயோதிபப் பெண் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத துடன் தொடர்புடையவர் என்று சந்தேகிக்கப் படும் அவரின் வளர்ப்பு மகன் எதிர்வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள் ளார். இராஜநாயகம் சுதாகரன் என்ற சந்தேக நபர் நேற்று யாழ். நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி. விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப் பட்டார். இவரை எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த ராஜநாயகம் தவமணி கழுத்தில் சேலைத் துணியால் இறுகக் கட்டப்பட்ட நிலையில் சடல மாகப் கோப்பாய் பொலீஸாரால் மீட்கப்பட்டமை தெரிந்ததே. (எ-13)

# ரயில்வே வேலைநிறுத்தம் இன்றுவரை ஒத்திவைப்பு

நேற்று நள்ளிரவு முதல் வேலை நிறுத்தத் தில் ஈடுபடவிருந்த ரயில்வே ஊழியர்கள் தமது போராட்டத்தை இன்று நள்ளிரவுவரை பின்போட டுள்ளனர்.

போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா வின் வேண்டுகோளை அடுத்து இவ்விடயம் குறித்து இன்று பேச்சுக்களை நடத்துவதற்கு ரயில்வே தொழிற்சங்கக் கூட்டமைப்பு இணங்கி யுள்ளது. இன்று பேச்சு மூலம் தீர்வுகான வசதி யாகவே வேலை நிறுத்தம் தள்ளிப் போடப் பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. சம்பள முரண பாட்டைத் தீர்ப்பது உட்பட ஆறு கோரிக்கை களை முன்வைத்து ரயில்வே அதிகாரசபையின் ஊழியர்கள் நேற்று நள்ளிரவு முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போகின்றார்கள் என அறிவித்திருந்தனர்.

நேற்றுக்காலை போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா சம்பந்தப்பட்ட ரயில்வே தொழிற் சங்கங்களின் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு நுவரெலியாவில் தங்கியிருக்கும் தான் இன்று நேரடியாகப் பேசுவதற்கு கொழும்பு வருவார் என அறிவித்தார். இதையடுத்து இன்று நள்ளிரவு வரை உத்தேச வேலைநிறுத்தம் தள்ளிப்போடப் பட்டது. உரிய தீர்வு இன்று காணப்படாவிட் டால் இன்று நள்ளிரவு முதல் வேலைநிறுத் தத்தில் தாங்கள் குதிப்பார்கள் என ரயில்வே கூட்டுத் தொழிற்சங்க அமைப்பின் செயலாளர் சம்பத் தெரிவித்தார். (எ-க)

# வெளிநாட்டு நாணய வங்கிக் கணக்கிலிருந்து 2,500 கோடி ரூபாவையும் அரசு எடுத்துவிட்டது

## வாக்குறுதிகளை நிறைவேற்ற முயற்சி?

கொழும்பு,நவ.15

நாட்டுமக்களுக்கு அளித்த வாக்குறுதி களை நிறைவேற்ற முடியாமல் திண்டாடும் இந்த அரசு, வெளிநாடுகளில் உள்ள இலங் கையர்களின் வங்கி வைப்புப் பணமாக இருந்த 2 ஆயிரத்து 500 கோடி ரூபாவையும் சுருட்டிக்கொண்டது.

வெளிநாடுகளில் வாழ்பவர்களின் வெளி நாட்டு நாணய வங்கிக்கணக்கில் இருந்த பணத்தில்தான் அரசு இப்போது கைவைத் துள்ளது. இவர்கள் நாடு திரும்பும்போது தமது பணத்தை எடுக்கமுடியாத நிலை ஏற்பட்டுள் ளது என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

இப்படி விடயத்தைப்போட்டு உடைக்கின் றார் முன்னாள் பிரதி நிதி அமைச்சரும், கொழும்பு மாவட்ட ஐதேக. நாடாளுமன்ற உறுப்பி னருமான பந்துல குணவர்த்தன.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

நிறைவேற்றச் சிரமமான பல வாக்குறுதி களை ஜனாதிபதியும் அவரது சகாக்களும் தேர்தல் காலத்தில் வழங்கியே வெற்றிபெற்ற னர்.

★ மூன்று மாத காலத்திற்குள் அரச ஊழி யர்களுக்கு 70 வீத சம்பள உயர்வு.

★ 40 ஆயிரம் பட்டதாரிகளுக்கு உடனடி நியமனங்கள்.

★ 30 ஆயிரம் இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு.

★ அத்தியாவசியப் பொருள்களின் விலை குறைப்பு.

என வாக்குறுதிகளை அள்ளிவீசினர். இதனால் மக்கள் பெரும் எதிர்பார்ப்புக்களுடன் இருக்கின்றனர். ஆனால், அரசால் வாக்குறு திகளை நிறைவேற்ற முடியவில்லை. இப்பொழுது பொதுமக்கள் அரசின் கழுத்தைப் பிடிக்கும் நேரம் வந்துவிட்டது.

எதிர்வரும் 18 ஆம் திகதி அரசு சமர்ப்பிக்க இருக்கும் முதலாவது வரவு - செலவுத் திட்டத்தில் தமது வாக்குறுதிகளை பற்றிக் கட்டாயமாக அறிவித்தே ஆகவேண்டும் என்ற நிலை அரசுத்தரப்பினருக்கு.

ஐ.தே.மு. ஆட்சியின்போது உதவி வழங் கும் நாடுகளால் வழங்கப்படும் என உறுதி யளிக்கப்பட்ட 45 ஆயிரம் கோடி ரூபா மற்றும் வரி மன்னிப்புச் சட்டத்தை ரத்து செய்வதன் மூலம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட 21 ஆயிரம் கோடி ரூபா எல்லாம் உடனே கிடைத்து விடும் என்ற பெரும் நம்பிக்கையுடனேயே ஜனாதிபதியும் அவரது கூட்டமைப்பினரும் தேர்தலின்போது வாக்குறுதிகளை அள்ளி விட்டனர்.

ஆனால், இவை எவையுமே கிடைக்க வில்லை. இப்போது ஆப்பிழுத்த குரங்கு போல சிக்கிக்கொண்டுள்ளது அரசு.

இந்த இக்கட்டான நிலையிலும்கூட ஜனா திபதி வாய்ச் சவடாலடிக்கின்றார். நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவி ஏற்று பத்தாவது வருடத்தில் மேலும் மேலும் உறுதிமொழிகளை வழங்கிவருகின் றார்.

சகல அரச ஊழியர்களுக்கும் 70 வீத சம்பள உயர்வு வழங்குவேன். பாதுகாப்புத் துறையி னருக்கு 80 வீத சம்பள உயர்வு வழ்ங்குவேன் என்று மீண்டும் கூறுகின்றர்.

ஆனால், நிதி அமைச்சரோ இதை எல்லாம் எப்படிச் சமாளிப்பது என்று தெரியாமல் விழி பிதுங்கிப்போய் நிற்கின்றார். ஏற்கனவே 1000 கோடி ரூபாவுக்கு மேல் தேசிய வங்கிகளில் கடன்பெற்றுவிட்டது அரசு. ஊழியர் சேமலாப நிதி, நம்பிக்கை நிதியம் என்பனவற்றிலும் கை வைத்துவிட்டது.

இப்பொழுது மிஞ்சி இருந்த இலங்கைக்கு வெளியே (வதிவிடமற்றோர்) வசிப்பவர்கள் வங்கிகளில் வைப்புச் செய்திருக்கும் வெளி நாட்டு நாணயக் கணக்கில் இருக்கும் 2 ஆயிரத்து 500 கோடி ரூபாவிலும் கைவைத்துவிட்டது.

இதனால் நாட்டில் மேலும் பொருளாதாரச் சீரழிவு ஏற்படும்மேயன்றி சுபீட்சம் ஏற்படாது. இந்த உண்மைகளை ஒரு பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்ற வகையில் வெளியிடவேண்டி யது எமது கடமை என்றும் பந்துல குணவர்த் தன கூறினார். (எ-க)

# அரிசி, சீனி இறக்குமதி செய்யும் உரிமை தென்னிலங்கை தனியார் நிறுவனத்திடம்

## அமைச்சரவை அனுமதி வழங்கியது

கொழும்பு,நவ.15

அரிசி,சீனி, பருப்பு ஆகியவற்றுக்கான இறக்குமதி உரிமையைத் தனியார் துறைக்கு மாத்திரம் வழங்குவது தொடர்பாக ஜனாதிபதி, அமைச்சரவையில் தாக்கல் செய்துள்ள விசேட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை யின் அனுமதி கிடைத்துள்ளது.

இதன் ஆரம்பக் கட்ட நடவடிக்கையாக இலங்கைக்கு அரிசி இறக்குமதி செய்வது தொடர்பான உரிமையை விக்கிரமசிங்க பிர தர்ஸ் என்ற நிறுவனத்துக்கு வழங்கத் தீர் மானிக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்துக்கு மேற்படி அனுமதியை வழங்குவதற்கு முன்னர் ஜனாதிபதி கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம் மற்றும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங் களிடமிருந்தும் அரிசியை விற்பனை செய்யக் கூடிய விலை விவரங்களைக் கோரி யிருந்தார். இறுதியில் குறைந்த விற்பனை விலைகளை முன்வைத்திருந்த மேற்படி தனியார் நிறுவனமே தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய எதிர்காலத்தில் கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனமோ அல்லது கூட்டுறவுச் சங்கங்களோ வேறு தனியார் நிறுவனங்களோ அரிசியை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட் டுள்ளது. (எ)

உதயன்

## குளம் வற்றுவதற்கு காத்திருக்கும் கொக்கு!

'இந்து' நாளிதழின் கொழும்புச் செய்தியாளர் வீ. எஸ்.சம்பந்தனுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஒரு பேட்டியளித்திருக்கின்றார். அதில் அவர் தெரிவித்துள்ள விடயங்கள் அவர் யதார்த்தத்தை உணராமல் வேறு ஓர் உலகில் வாழ்கின்றாரோ என்ற எண்ணத்தையும்; இல்லை, இல்லை பகற் கனவு காண்கின்றார் என்ற நினைப்பையும் ஏற்படுத்துகின்றன.

இராணுவ ரீதியாகப் புலிகள் பலமடைந்து வருகின்றார்கள் என்ற யதார்த்தத்தை ஏற்க - அல்லது அதை ஒப்புக்கொள்ள - ஜனாதிபதி தயாரில்லை என்பதை அப்பேட்டி அப்பட்டமாக வெளிப்படுத்துகின்றது.

இது உண்மையில் யதார்த்த நிலையை அவர் புரிந்துகொள்ளாததால் வந்திருக்கலாம். அல்லது புரிந்தும் கூட புரியாதது போன்று அவர் வெளிப்பகட்டுக்குக் கருத்துக் கூற முற்பட்டதால் வெளிப்பட்டிருக்கலாம்.

"விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வரலாற்றில் முதல் தடவையாக அந்த அமைப்பு மூன்று பிரிவுகளாகப் பிளவுபட்டிருக்கின்றது. பிரபாகரன் தனது இராணுவத் தளபதியை இழந்துவிட்டார். எனவே, இராணுவ ரீதியாகப் புலிகள் பலமடைந்து வருகின்றார்கள் என்று கூறமுடியாது." எனக் குறிப்பிடுகின்றார் ஜனாதிபதி குமாரதுங்க.

தென்னிலங்கை ஊடகங்களும், இராணுவ உளவு அமைப்புகளும் கொடுத்த கயிறையும் அவர் நன்கு விழுங்கியிருக்கின்றார் என்று தெரிகின்றது.

தலைவர் பிரபாகரனுக்கும், கடற்புலிகளின் தளபதி கேணல் சூசைக்கும் இடையில் பெரும் கருத்து முரண்பாடு, பிளவு என்பது போலவும் -

இதனால், புலிகள் இயக்கத்துக்குள் கடுமையான நெருக்கடி உருவாகியுள்ளது என்றும் - கூட அவர் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

அது தவிர, இந்தப் பேட்டியில் அவர் தெரிவித்துள்ள மற்றொரு கருத்தும் கவனிக்கத்தக்கது.

*"புலிகளில் நிறைய மாற்றம் ஏற்பட்டுள்ளது. புலிகளின் உறுப்பினர்கள் வெளிநாடுகளுக்குச் செல்கிறார்கள். இன்னோர் உலகம் இருப்பதைப் பார்க்கிறார்கள்.*

*"யுத்த நிறுத்த மீறல்களுக்கு மத்தியிலும் அவர்கள் (புலிகள்) யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்கின்றார்கள்.*

*"ஈழத்திற்கு மாற்றீடான தீர்வு ஒன்று குறித்து ஆராயத் தயார் எனக் கூறியிருக்கின்றார்கள்.*

*"சில வருடங்களுக்கு முன்னர் பிரபாகரனுக்கு எதிர்ப்புத் தெரிவித்துக்கொண்டு கருணாவோ, சூசையோ உயிருடன் இருந்திருக்க முடியாது.*

*"ஆகவே, பல விடயங்கள் மாறுகின்றன. இது பிரபாகரனின் ஆளுமை மாற்றத்தால் அல்ல.*

*"அரசியல் நிபுணர் என்ற வகையில், பிரபாகரன் போன்ற பல தனிநபர்கள் குறித்து உலகளாவிய ரீதியில் (நான்) ஆராய்ந்திருக்கின்றேன். இந்தத் தலைவர்களிடமிருந்து (பிரபாகரன் போன்றோரிடமிருந்து) அதிக மாற்றங்கள் எதனையும் நான் எதிர்பார்க்கவில்லை. எனினும், இயக்கங்கள் மாறும். ஏனையவர்கள் மாறுவார்கள். அரசியல் சூழ்நிலைகளும் மாறும். எனக்கு நம்பிக்கையுண்டு." - என்று இந்தப் பேட்டியில் கூறியிருக்கின்றார் ஜனாதிபதி குமாரதுங்க.*

ஆக, இந்தப் பேட்டி மூலம் அவர் வெளிப்படுத்தும் கருத்து - நம்பிக்கை - எதிர்பார்ப்பு - என்ன?

புலிகள் பலவீனமடைந்து வருகிறார்கள். அதன் தலைவர் பிரபாகரன் மாறமாட்டார். ஆனால், அவரைப் புறம் ஒதுக்கி அவரது இயக்கமும், இயக்கத்தவர்களும், மக்களும் மாறுவார்கள் - இப்படி மனப்பால் குடிக்கிறார் ஜனாதிபதி குமாரதுங்க.

அரசியல் நிபுணர் என்ற வகையில் அவர் கூறும் எதிர்வுகூறல் இது என்று குறிப்பிடும்போது அது உலக மகா 'ஜோக்' போன்று வெளிப்படுகிறது.

பிரபாகரன் என்பவர் தனிமனிதர் அல்லர். தமிழ் தேசியத்தின் ஒட்டுமொத்த எழுச்சியின் வெளிப்பாட்டுக் குறியீடு அவர். கொள்கைக்காகவும் இலட்சியத்துக்காகவும் உயிரையும் துச்சமென ஈகம் செய்யும் - அர்ப்பணிக்கும் - தியாக மறவர்களின் சமுத்திரம் புலிகள் இயக்கம்.

'குளம் வற்ற மீன்பிடிக்கலாம் எனக் காத்திருந்த கொக்கு குடல் வற்றிச் செத்ததாம்' என்ற பழமொழி உள்ளது.

அதுபோன்று, தியாக மறவர்களின் விடுதலைப் புலிகள் என்ற சமுத்திரம் வற்றினால் ஒட்டுமொத்தத் தமிழினத்தையும் அடக்கியாளும் தமது எண்ணம் நிறைவேறிவிடும் எனக் காத்திருந்து ஏமாறப் போகிறார் ஜனாதிபதி.

அமைதி முயற்சிகளை - சமாதானப் பேச்சுக்களை - ஆரம்பிக்காமல் அவர் இழுத்தடிப்பதன் உள்நோக்கத்துக்கு இந்தப் பகற்கனவு காணும் நம்பிக்கைதான் காரணம் போலும்.

விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு துப்பாக்கியுடன் இயங்கத் தொடங்கிய காலத்தில் அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவும், அவரின் பின்னர் பிரதமராகவும், ஜனாதிபதியாகவும் நீடித்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் கண்ட கனவின் தொடர்ச்சியைத் தான் இப்போது சந்திரிகாவும் காணுகின்றார். அவ்வளவு தான்!

# ஒடுக்கப்பட்ட மக்களால் வலிமைமிக்க தலைவராக உணரப்பட்டவர் அரபாத்

## யஸீர் அரபாத்தின் மறைவு குறித்துத் தலைவர் பிரபாகரன் செய்தி



கிளிநொச்சி,நவ.15

வரலாற்றில் சிக்கலான தருணத்தில் நிகழ்ந்துள்ளது பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தின் மறைவு. அவரின் மறைவுக்கு இதயபூர்வமான அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன் என்று விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

அரபாத்தின் மறைவுக்கு அஞ்சலி தெரிவித்துப் பலஸ்தீன மக்களுக்கும் அவர்களது தலைமைத்துவத்துக்கும் அனுப்பியுள்ள அனுதாபச் செய்தியிலேயே தலைவர் பிரபாகரன் இப்படிக் குறிப்பிட்டுள்ளார்.

அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வரலாற்றில் சிக்கலான தருணத்தில் நிகழ்ந்துள்ள யஸீர் அரபாத்தின் மறைவு ஒடுக்கப்பட்டு, நீதி மறுக்கப்பட்டு - சுதந்திரமும் விடுதலையும் பெற அவாவுறும் மக்களுக்கு ஈடுசெய்யமுடியாத இழப்பாக அமைகிறது. பலஸ்தீன மக்களின் உயர் மரியாதைக்குரிய தேசியத் தலைவர் ஜனாதிபதி யஸீர் அரபாத் அவர்களின் மறைவுக்கு எனது இதய பூர்வமான அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



பலஸ்தீன மக்களின் தேசிய ஒற்றுமையின் குறியீடாக யஸீர் அரபாத் விளங்கினார். அவர் விடுதலைக்கான தமது மக்களின் போராட்டத்தின் சரித்திர நாயகனாவார்.

அவர் பலஸ்தீன மக்களால் மட்டுமல்ல, உலகத்திலுள்ள அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களாலும் முன்னுதாரணமாக வலிமைமிக்க ஒருவராக ஆத்மபூர்வமாக உணரப்பட்டவர் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-204)





நேற்று யாழ்ப்பாணம் ஜும்மா பள்ளி வாசலில் பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தின் மறைவுக்கு அனுதாபந் தெரிவித்து முஸ்லிம் மக்கள் ஜனாசா தொழுகையில் ஈடுபட்டதை முதலாவது படத்திலும், நோன்புப் பெருநாள் தொழுகையில் ஈடுபட்ட மக்களை இரண்டாவது படத்திலும் காணலாம். *(படங்கள்: தீபன்)*

# யஸீர் அரபாத்தின் மறைவுக்கு யாழ். முஸ்லிம்கள் அனுதாபம்

யாழ்ப்பாணம்,நவ.15

பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து யாழ். மாவட்ட முஸ்லிம்கள் யாழ்ப்பாணம் ஜும்மா பள்ளிவாசலில் நேற்றுக் காலை விசேட ஜனாசா தொழுகையில் ஈடுபட்டனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிதொடக்கம் யாழ். ஜும்மா பள்ளிவாசலில் நோன்புப் பெருநாள் தொழுகைகள் இடம்பெற்றன.

காலை 9.45 மணியளவில் நோன்புப் பெருநாள் தொழுகையினை முடித்துக் கொண்ட இவர்கள் மறைந்த பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்துக்கு அனுதாபம் தெரிவித்துத் தொழுகையில் ஈடுபட்டனர். இதில் பெருமளவான முஸ்லிம் ஆண்கள் மற்றும் பெண்கள் கலந்து கொண்டனர். (10-7)

# மக்கள் வங்கியின் 'ஜயஸ்ரீ' அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் நால்வருக்குத் தங்க நாணயம்

சங்கானை,நவ.15

மக்கள் வங்கியின் மாதாந்த ஜயஸ்ரீ சீட்டிழுப்பில் வங்கியின் சங்கானைக் கிளையைச் சேர்ந்த நால்வர் அதிர்ஷ்டசாலிகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

சங்கானையைச் சேர்ந்த வைரமுத்து கிருஷ்ணதாசன் கடந்த மே மற்றும் ஜூலை மாதங்களுக்கான அதிர்ஷ்டசாலியாகத் தெரிவுசெய்யப்பட்டு இரண்டு தங்க நாணயங்களைப் பரிசாகப் பெற்றுள்ளார்.

அராலியைச் சேர்ந்த திருமதி நி.நித்தியானந்த லக்ஸ்மி, சித்தங்கேணியைச் சேர்ந்த ஆ.பூமணி, திருமதி சி.சாந்தினி ஆகியோரும் அதிர்ஷ்டசாலிகளாகத் தெரிவாகித் தங்க நாணயத்தைப் பெற்றுள்ளார்கள்.

தீபாவளித் தினத்தன்று சங்கானைக் கிளையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் அவர்களுக்கான தங்க நாணயங்களை மக்கள் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் கே.சிவபாதவிருதயர், சங்கானைக் கிளையின் முகாமையாளர் பொ.அச்சுதம்பிள்ளை ஆகியோர் வழங்கினர். (10-29)

# கொட்டும் மழைக்கு மத்தியிலும் துயிலும் இல்லத்தில் சிரமதானம்

வலி.வடக்கு,நவ.15

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் கொட்டும் மழைக்கு மத்தியிலும் பொதுமக்கள் சிரமதானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

வலிகாமம் பகுதியில் உள்ள பொது அமைப்புகள், தொழிற்சங்கங்கள் ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் நாளாந்தம் தொடர்ச்சியான முறையில் சிரமதானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கோப்பாய்ப் பிரதேச பாடசாலை மாணவர்களும் நாளாந்தம் சுழற்சி முறையில் குறிப்பிட்ட நேரங்களுக்குச் சிரமதானப் பணிகளை முன்னெடுக்கின்றார்கள்.

மாவீரர் துயிலும் இல்லத்தைச் சூழவுள்ள வீதிகளான இராசபாதை வீதி, உரும்பிராய் - கோப்பாய் வீதி, கோண்டாவில் - இருபாலை வீதி மற்றும் கோண்டாவில் டிப்போ வீதி என்பனவற்றில் உள்ள பற்றைகள், புல், பூண்டுகளைக் காணிச் சொந்தக்காரர்கள் துப்புரவு செய்துவருகின்றனர். (ஐ-86)

### மானிப்பாய்ப் பிரதேச சபை மண்டபத்தில்

# தொழில் பயிற்சியை நிறைவுசெய்த யுவதிகளுக்குச் சான்றிதழ்கள்

யாழ்ப்பாணம்,நவ.15

மானிப்பாய்ப் பிரதேச சபையின் அனுசரணையுடன் சபை மண்டபத்தில் நடத்தப்படும் யுவதிகளுக்கான தொழிற பயிற்சிகளை நிறைவுசெய்தவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

'ஆதிஷா ஆட் அன்ட் டிசைன்' நிறுவனத் தொழில் பயிற்சியாளரால் நடத்தப்படும் ஐந்து வகையான பயிற்சிகளை நிறைவுசெய்தவர்களுக்கே இச்சான்றிதழ்கள வழங்கப்படும்.

வேலையற்ற யுவதிகளுக்குத் தொழில் வாய்ப்பையும், சுயதொழிலையும் ஊக்குவிக்கும் நோக்கில் பல்வேறு பயிற்சிகள் பிரதேச சபை மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றன.

இப்பயிற்சியில் சித்தியடைந்தவர்களுக்குப் பிரதேச சபையின் அனுசரணையுடன் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கையினைப் பிரதேச சபைச் செயலாளர், உள்ளூராட்சி உதவியாளர் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர். (ஐ-185)

## நாளை

கார்த்திகை 01
செவ்வாய்க்கிழமை
(16.11.2004)
திதி: சதுர்த்தி
நண்பகல் 12.00 வரை.
நட்சத்திரம் : பூராடம்
பின்னிரவு 02.29
சுபநேரம்: 10.38 - 12.08
ராகுகாலம்: 03.08 - 04.38
(பழைய நேரப்படி)

# சுற்றாடல் முகாமைத்துவம் தொடர்பாக வேலைப் பட்டறை நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம்,நவ.15

சுற்றாடல் முகாமைத்துவம் தொடர்பாக வேலைப் பட்டறைகள் மாவட்ட ரீதியாக நடத்தப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கையினைச் சுற்றாடல் இயற்கை வளங்கள் அமைச்சு (சூழல்) பணிப்பாளர் மேற்கொண்டுள்ளார்.

திண்மக் கழிவுகளால் இன்று சமூகம் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றது. இதனால் சூழல் பாதுகாப்புக்கு அபாயம் ஏற்படலாம் எனவும் -

இதனால் மாவட்ட ரீதியாக உள்ளூராட்சித் திணைக்களங்களை இணைத்த வகையில் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை 'திண்மக் கழிவு முகாமைத்துவம்' தொடர்பான வேலைப் பட்டறை நடத்தவேண்டும் எனவும் - வவுனியா நகர சபையில் கடந்த வாரம் நடைபெற்ற திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான கூட்டத்தில் திட்டமிடற் பிரிவினரால் வழங்கப்பட்ட கோரிக்கையை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ-185)

## உதயவாக்கு

வாழ்க்கை என்பது சந்திரன் போன்றது. சிலவேளை இருட்டாகவும், சில வேளை வெளிச்சமாகவும் இருக்கும்.

## கடமை தொடர்பாக புதிய சுற்றறிக்கை

வலி.தென்மேற்கு,நவ.15

அரச வைத்தியசாலைகளில் கடமையாற்றும் பரிசாரகர்களின் கடமைப்பட்டியல் தொடர்பான புதிய சுற்றறிக்கை ஒன்று கொழும்பிலுளள சுகாதார சேவைத் திணைக்களத்தினால் கடந்தவாரம் வெளியிடப்பட்டுள்ளது.

இவர்கள் தங்கள் கடமைநேரத்தில் 1999 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் குறிப்படப்பட்டிருக்கும் சீருடையை அணிநது கொள்ளவேண்டும் - என்று மேற்படி சுற்றறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இவர்கள் மேற்கொள்ள வேண்டிய கடமைகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ள இச்சுற்றறிக்கை யாழ். குடாநாட்டிலுள்ள அரசினர் வைத்தியசாலைகள், யாழ். போதனா வைத்தியசாலை ஆகியவற்றிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (10-135)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 3924298 இலிருந்து 3941370 வரை

சீட்டிழுப்பு இல. 1556 திகதி 13.11.2004

வெற்றி எண்கள்

17 27 39 47 53

போனஸ் எண் 08

ஜக்பொட் பரிசு ரூபா.15,00,000/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத்தொகை |
|---|---|---|---|
| 5 | - | .15,00,000/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | - | 1,00,000/- | - |
| 4 | 105 | 10,000/- | 10,50,000/- |
| 3 | 5,238 | 500/- | 26,19,000/- |
| 2 | 88,094 | 20/- | 17,61,880/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 17ம் எண் (போனஸ் எண் தவிர்ந்து) | 108,209 | 10/- | 10,82,090/- |

இந்த புதன்கிழமை ஜக்பொட் வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ. 70,12,970/-

Rs. 23,36,250/-

தொடர் இல. 2035361 க்கு மேற்பட்ட வாதா நிற டிக்கட்டுக்கள் 2004 நொவம்பர் 17 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

சனிக்கிழமை அதிர்ஷ்டச் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகை, தையல் இயந்திரம் மற்றும் சைக்கிள்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3929056-3-58
3929471-3-12
3937528-6-04
3927563-2-04
3938253-5-80

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.


## உள்ளகப் பயிற்சி

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலை மற்றும் சுகாதாரத்திணைக்களம் என்பவற்றில் கடமையாற்றும் சிறறூழியர்களுக்கான உளளகப் பயிற்சிநெறி இன்று ஆரம்பமாகவுள்ளது. கச்சேரி - நல்லூர் வீதியிலுள்ள பயிற்சி நிலையத்தில் நடைபெறும் இப்பயிற்சியில் பரிசாரகாகள், சாதாரண மற்றும் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (10-135)

## வீட்டுத்தோட்டம் தொடர்பான பயிற்சி

வலி.தென்மேற்கு,நவ.15

'மூவி மொண்டோ' நிறுவனம் வலி.தென்மேற்குப் பிரதேச செயலகப் பிரிவில் 30 விவசாயிகளைத் தெரிவுசெய்து அவர்களுக்கு வீட்டுத்தோட்டம் தொடர்பான பயிற்சியையும் உபகரணங்களையும் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுவருகின்றது.

இவர்களுக்கான வீட்டுத்தோட்டப் பயிற்சி திருநெல்வேலியிலுள்ள விவசாய பயிற்சி நிலையத்தில் இம்மாதம் வழங்கப்படவுள்ளது. கீரிமலை கமநல கேந்திர நிலைய விவசாயப் போதனாசிரியர் மற்றும் இப்பிரிவு கிராம அலுவலர்களின் சிபார்சின்பேரில் இவ் வீட்டுத்தோட்டச் செய்கைக்கான பயனாளிகள் தெரிவுசெய்யப் பட்டுள்ளதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (10-135)

## மரண அறிவித்தல்

### கணவதிப்பிள்ளை ஆழ்வாப்பிள்ளை திருஞானம் (திரு)



(உரிமையாளர், Cey.Can. Group of companies)

யாழ்ப்பாணம், பருத்தித்துறை, புலோலி மேற்கைப் பிறப்பிடமாகவும் இல.7, விவேகானந்த அவனியூ, வெள்ளவத்தையை வதிவிடமாகவும்கொண்ட Cey.Can Group of Campanies இன் உரிமையாளர் ஆ.திருஞானம் (திரு) அவர்கள் 14.11.2004 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆழ்வாப்பிள்ளை - செல்லம்மாவின் அன்பு மகனும் திருமதி சகுந்தலாராணியின் அன்புக் கணவரும் சங்கர் (Australia), பமிலா, சர்மிலா (Holy Family Convent , Bam balapitiya) ஆகியோரின் அன்புத் தந்தையும் வேலுப்பிள்ளை கிருபரத்தினத்தின் அன்பு மருமகனும் விக்னேஸ்வரமூர்த்தி (உரிமையாளர், VMS Travel & Tour PVT Ltd.) தெய்வேந்திரத்தின் (Australia) அன்புத் தம்பியும் மங்கையர்க்கரசி (Canada), வசந்தா (Australia), சரோஜா (Canada), Dr.சுகுணா(Australia) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜெகநாதன் (Canada), விமலநாதன் (Australia) ஆகியோரின் அன்புச் சகலனும் சுபாசினி, கிருஷனா, தேவகி, சிவசாமி, உதயகுமார், சுஜீவ், றுக்ஷி, சாமினி, ஹரி ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Add: No.7,விவேகானந்த அவனியூ, வெள்ளவத்தை, கொழும்பு - 06.
தொடர்பு: 011 2588026

தகவல்: மனைவி, பிள்ளைகள்.
(சி-39042) (34)

## வலி. மேற்குப் பிரதேசத்தில் மீனின் விலை வீழ்ச்சி

வட்டுக்கோட்டை,நவ.15

வலிகாமம் மேற்குப்பகுதியில் தொடர்ந்து பெய்துவரும் மழையினால் மீனின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

பொன்னாலை, அராலி, காக்கைதீவு ஆகிய பகுதிகளில் மீன் அதிகளவில் பிடிக்கப்படுவதால் மிக மலிவான விலையில் சந்தையில் விற்கப்பட்டு வருகின்றது.

மாலை வேளைகளிலும் கூட பிரதான வீதிகளில் வைத்து மீன் வியாபாரம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பிடிக்கும் மீன்களை விற்பனைசெய்வதில் வியாபாரிகள் பெரும் சிரமங்களினை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (10-203-161)

## சமூகப் பாதுகாப்புக் குழுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,நவ.15

மனித உரிமைகளை மேம்படுத்தலுக்கும் பாதுகாத்தலுக்குமான மாவட்ட சமூகப் பாதுகாப்புக் குழுக்கூட்டம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

உதவிக்கல்விப் பணிப்பாளரும் மேற்படி அமைப்பின் தலைவருமான எம். ஸ்ரீபதி தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், யாழ். மாவட்டத்தின் தற்போதைய மனித உரிமைகளின் நிலைப்பாடு அதிகரித்துவரும் வீதி விபத்துக்களைத் தடுப்பது, விவசாய உற்பத்திப் பொருள்களைப் பாதுகாத்தல், சந்தை வாய்ப்பு வசதிகளைக் கோருதல் என்பவை பற்றி ஆராயப்படவுள்ளன. (10-5)


விற்பனைக்கு
புதிய CD 125T Benly NPJ - XXXX
உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777- 251258
(38627)

இத்தாலிப் பட்டறை விற்பனைக்கு
CU 300LAB வகை வேலைப்பாட்டுடன் கூடிய புதிய தச்சுவேலை பட்றை விற்பனைக்குண்டு.
(38628) தொடர்பு:021-228 5951


## பன்றியால் தாக்கப்பட்டார்

மழை பெய்து கொண்டிருந்தவேளை கூட்டமாக வந்த பன்றிகளைக் கலைக்க முற்பட்ட இளைஞனைப் பன்றி தாக்கிக் காயப்படுத்திய சம்பவம அல்லாரை, சப்பச்சி மாவடியில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த ந.பிரசாத் (வயது16) என்ற இளைஞனே காயமடைந்தவராவார். கூட்டமாக வந்த பன்றிகளைக் கலைக்க முற்பட்ட வேளை பன்றியொன்று இளைஞின் காலைத தாக்கிக் காயப்படுத்தியதால் அவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றார். (10-204-117)

## வீதியை புனரமைக்கக்கோரி மகஜர்

மாதகல் விபுலாணந்தர் வீதியை உடனடியாகப் புனரமைப்புச் செய்து தருமாறுகோரி விபுலானந்தர் படிப்பகம் வலி.தென்மேற்கு பிரதேசசபை செயலாளருக்கு மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளது.

கடந்த 25 வருடங்களுக்கு மேலாகக் கவனிப்பாரின்றி உள்ள விபுலாணந்தர் வீதியை அடுத்த ஆண்டிலாவது மீள் புனரமைப்புச் செய்து தருமாறு கோரி அப்பகுதியைச் சேர்ந்த 80 பேர் கையொப்பம் இட்ட மகஜர் சபையின் செயலாளர் பி.விக்டரிடம் கையளிக்கப் பட்டுள்ளது. (ஜ-185)


## அனைவருக்கும் புலமைப்பரிசில்

COMPUTER EXPRESS
Institute of Information Technology

இலங்கையில் தமிழ் மொழிமூலம் வெளிவரும் கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் கணனிச்சஞ்சிகையின் கிளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸின் இவ் ஆண்டின் இறுதிப் புலமைப்பரிசில் திட்டம்

எமது அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளுக்கும் 80% கட்டணக் குறைப்புச் செய்வதில் பெருமையடைகின்றோம்

80% OFF

| பாட நெறிகள் | | பாடநெறிக் கட்டணம் | செலுத்தவேண்டிய கட்டணம்(20%) |
|---|---|---|---|
| Diploma i n computer Science | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| Honours Diploma in Computer Science | - 4 மாதம் | 8,000 | 1,600 |
| Diploma In WebPage Designing | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| Diploma in Graphic Designing | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| Diploma In Desk top Publishing | - 4 மாதம் | 5,000 | 1,000 |
| Diploma in Hard Ware Engineering | - 3 மாதம் | 5,000 | 1,000 |
| Diploma in AutoCAD | - 3 மாதம் | 5,000 | 1,000 |
| Accounting Package | - 3 மாதம் | 7,000 | 1,400 |

50% OFF

Advances Courses

| | | |
|---|---|---|
| Diploma in Net Working | ~~4000~~ | 2000 |
| Diploma in Video Editing | ~~6000~~ | 3000 |
| Diploma In Multimedia | ~~5000~~ | 2500 |

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.

Individual Courses
- Fox Pro Pascal
- C Language / C++
- Java
- Microsoft Office
- Microsoft Visual Basic 6.0
- Internet & E-mail

December 05ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்துகொள்ளவும்.

வகுப்புக்கள் ஆரம்பம்
Batch -01 - 19/11/2004
Batch -02 - 20/11/2004
Batch -03 - 28/11/2004

Maniyam Building
இல. 15, சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
0777 222422, 0777917781

# கால்நடை நோய்க்கான தடுப்புமருந்துகள் குறைந்த அளவிலேயே கிடைக்கின்றன

## ஒட்டுசுட்டான் பிரதேச போதனாசிரியர் தெரிவிப்பு

ஒட்டுசுட்டான்,நவ.15

ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்குக் கால்நடைகளுக்கான தடுப்பு மருந்துகள் குறைந்தளவே கிடைக்கின்றன. இவற்றைக் கொண்டு கால்நடை வளர்ப்போரின் தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியாதுள்ளது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஒட்டுசுட்டான் கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் வே.இரத்தினசபாபதி.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

கால்நடைகளுக்கு ஏற்படும் தொண்டை அடைப்பான் நோய்க்குரிய தடுப்பூசிகள் தற்போது சகல பகுதிகளிலும் ஏற்றப்படுகின்றன. ஆனால், பெய்துவரும் மழையினால் சில பகுதிகளில் அதனைப் போடமுடியாதுள்ளது.

கோழிகளுக்கான வக்சீன் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் வழங்கப்படுகின்றபோதும் அதனைப் பெறுவதற்கு மக்கள் ஆர்வம் காட்டுவது மிகவும் குறைவு.

தற்போது பசுமாடுகளின் விலைகள் உயர்ந்து செல்கின்றன. இவ்வேளையில் நீல்லின மாடுகளை விருத்தி செய்வதற்கு மக்கள் ஆர்வம்காட்ட வேண்டும். இதற்கான சகல ஒத்துழைப்புக்களையும் நாம் வழங்கத் தயாரகவுள்ளோம்.

ஏற்கனவே இப்பிரதேசத்தில் குறிப்பாக ஒலுமடுப்பகுதியில் கால்நடைகளுக்கு கால்வாய் நோய் பரவ ஆரம்பித்துத் தற்போது கற்சிலை மடு, கருவேலங்கண்டல் ஆகிய பகுதிகளுக்கும் பரவ ஆரம்பித்துள்ளது. அதனைக் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவருவதற்கு அதற்கான மருந்து எம்மிடம் போதியளவில் இல்லை. இவற்றைப் போதியளவு வழங்குமாறு பலதடவைகள் சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டபோதும் இதுவரை கிடைக்கவில்லை. இந்நோயின் தாக்கம் காரணமாக இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்படுவதனையும், பால் எடுப்பதனையும் தடைசெய்துள்ளோம்என்றார். (10-5-341)




# முல்லையில் கமநலசேவை நிலையம் கடந்தவாரம் திறந்துவைக்கப்பட்டது

முல்லைத்தீவு நகரில் கமநல சேவை நிலையம் ஒன்று கடந்தவாரம் திறந்துவைக்கப்பட்டது.

கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் க.தர்மலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் கட்டடத்தைத் திறந்துவைத்தார்.

தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன், கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உட்படப் பலர் உரை நிகழ்த்தினார்கள்.

இந்நிகழ்வில் கமக்கார அமைப்பினர், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (10-204-353)

# பிரேதப் பெட்டி குறித்த தகராறினால் நீண்டநேரம் மழையில் நனைந்த சடலம்!

திருவையாறு,நவ.15

பிரேதப் பெட்டிக் கடைக்காரருக்கும் அங்கு பெட்டியொன்றைக் கொள்வனவு செய்தவர்களுக்கும் இடையே ஏற்பட்ட தகராறினால் சடலம் ஒன்று நீண்டநேரம் மழையில் நனைந்தது.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

இறந்த தமது உறவினரான இளைஞனின் சடலத்தை யாழ்பாணத்துக்கு எடுத்துச் செல்வதற்காகக் கிளிநொச்சியில் உள்ள பிரேதப் பெட்டிக் கடையில் இறந்தவரின் உறவினர்கள் பெட்டியொன்றைக் கொள்வனவு செய்துள்ளனர்.

அந்தப் பெட்டிக்குள் சடலத்தை வைக்க முற்பட்டபோது பெட்டியின் அளவு போதாமையால் அதனை அதற்குள் வைக்கமுடியவில்லை. இதனையடுத்துப் பெட்டியை மாற்றித் தருமாறு மேற்படி கடைக்காரரிடம் அதனைக் கொள்வனவு செய்தோர் கேட்டுள்ளனர்.

ஆனால், பெட்டியை மாற்றிக்கொடுக்க அந்தக் கடைக்காரர் மறுத்துவிட்டார். என்றும் இதனால், இரு தரப்பினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் செல்லப்படுகின்றது. ஆயினும், பெட்டியை மாற்றிக்கொடுக்கக் கடைக்காரர் முன்வராததால் சடலம் மழையில் நனைந்துகொண்டே யிருந்தது.

இதனைக் கேள்வியுற்ற காவல்துறையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் உதவியுடன் சடலத்தை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைத்தனர். (10-393)

## பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின்கீழ்

# ஒட்டுசுட்டான் பிரதேச கல்வி அபிவிருத்திக்கு 3 லட்சத்து 25 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு

ஒட்டுசுட்டான், நவ.15

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் ஒட்டுசுட்டான் பிரதேச கல்வி அபிவிருத்திக்கு 3 லட்சத்து 25 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாங்குளம் மகாவித்தியாலய அபிவிருத்திக்கு ஒரு லட்சம் ரூபாவும், ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயக் கட்டட அமைப்புக்கு 50 ஆயிரம் ரூபாவும், மாங்குளம் மகாவித்தியாலயத்தின் தளபாடம் மற்றும் நூல்கள் கொள்வனவுக்கு ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை ஒட்டுசுட்டான் வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு அவசர திருத்த வேலைகளுக்கென 2 லட்சம் ரூபாவும். முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்கு 35 ஆயிரம் ரூபாவும், தென்னைப் பயிர்ச்செய்கைக்கு 20 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (10-5-34)

# ஆளணிப் பற்றாக்குறை காரணமாக செயற்பாடுகளை முன்னெடுக்க இயலவில்லை

முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தின் செயற்பாடுகள் யாவும் ஆளணிப் பற்றாக்குறையால் மேற்கொள்ள முடியாதுள்ளன.

கடந்த கால யுத்த நடவடிக்கையால் ஏற்பட்ட இடம்பெயர்வுகளுக்கு முன்பு இந்த மன்றத்தில் உதவிப்பணிப்பாளர், ஐந்து பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள், இரண்டு எழுது வினைஞர்கள், தட்டெழுத்தாளர் மற்றும் பயிற்சி ஆசிரியர்கள் உட்பட 13 பேர் சேவையாற்றி வந்தனர்.

இடம்பெயர்வுக்குப் பின்னர் இவ் ஆளணியின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது ஒரு பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தரும், ஒரு சிற்றூழியருமே சகலரது கடமைகளையும் நிறைவேற்றி வருகின்றனர்.

புதுக்குடியிருப்புப் பகுதியில் இளைஞர் சேவை மன்றத்தினால் பல அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. குறிப்பாக பாண்டியன் குளம், துணுக்காய் ஆகிய இடங்களில் ஆங்கில வகுப்புக்களும், வற்றாப்பளை,, வள்ளிபுனம் ஆகிய இடங்களில் தையல் பயிற்சி நிலையங்களும் நடத்தப்படுகின்றன.

ஆளணிப்பற்றாக் குறையினால் அவற்றைச் சீராக முன்னெடுக்க முடியாதுள்ளது என்றும்-

இதனை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்டவர்களை பல தடவைகள் கோரியபோதும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற் கொள்ளப்படவில்லை என்றும் சுட்டிக் காட்டப்படுகிறது(10-5-353)






கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக் கல்வி நிறுவக அதிபர் தி.பிரபாகரனும் 'போருட்' நிறுவன செயற்றிட்ட முகாமையாளர் ஆர்னே பொலாரஸிம் கல்வி நிறுவகத்தில் கலந்துரையாடுவதைப் படத்தில் காணலாம். (படம்: வட்டக்கச்சி செய்தியாளர்)

# வட்டக்கச்சி மகா வித்தியாலய பொன்விழா நிகழ்வுகள் நாளை

வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தின் பொன்விழா நிகழ்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை மூன்று அமர்வுகளாக நடைபெறவுள்ளன.

முதலாவது அமர்வு காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும். இதில் பொன்விழா தொடர்பான நூல் வெளியிடப்படும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் கலந்துகொள்வார்.

பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகும் இரண்டாவது அமர்வில் பரிசளிப்பு நிகழ்வு இடம்பெறும். இதில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

மூன்றாவது அமர்வு மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும். இதில் பிரதம விருந்தினராகக் கரைச்சிப் பிரதேசசபை விசேட ஆணையாளர் பொன் நித்தியானந்தம் கலந்துகொள்வார். (10-5-405)

# கிளிநொச்சி மக்கள் வங்கியில் மீண்டும் தங்கநகை அடகுச் சேவை

கிளிநொச்சி மக்கள் வங்கிக் கிளையில் கடந்த மாதம் தொடக்கம் தங்கநகை அடகுச் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யுத்த அனர்த்தங்கள் காரணமாக, 1983 ஆம் ஆண்டு அடகுச் சேவை நிறுத்தப்பட்டது. நாட்டின் பல பாகங்களிலும் இச்சேவை சிறப்பாக நடைபெற்றுவருகிறபோதிலும், தற்போது 21 வருடங்களின் பின்னரே இச்சேவையை மீண்டும் ஆரம்பிக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இச் சேவையை மீண்டும் ஆரம்பிக்க மக்களும் அரச அதிபரும் எடுத்த நடவடிக்கைகளால் மீண்டும் இச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேச மக்கள் வங்கிக் கிளையின் காப்புறுதிக்கு அமைவாக வரையறுக்கப்பட்ட அளவிலேயே பணத்தேவையைப் பூர்த்திசெய்ய வங்கியின் தலைமைச் செயலகம் அனுமதி வழங்கியுள்ளது.

வங்கியின் ஏனைய கிளைகளில் உள்ள நடைமுறைகளைப் போன்றே வட்டிவீதம், பகுதி பகுதியாகப் பணம் செலுத்தித் தங்கநகை மீளப்பெறுதல் என்பன செயற்படுத்தப்படும் என முகாமையாளர் செயாஜா தெரிவித்துள்ளார்.(10-204-393)

# மின்சாரம் வழங்க நடவடிக்கை

புதுக்குடியிருப்பு, நவ.15

முல்லைத்தீவுப் பிரதேசத்துக்கு மின்சாரம் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கரைதுறைப்பற்று விசேட ஆணையாளர் இ.கிருஷ்ணபிள்ளை தெரிவித்துள்ளார்.

இதன் ஒரு கட்டமாக களப்பாடு, செல்வபுரம் ஆகிய கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளது. மின்பிறப்பாக்கி மூலம் மின்சாரம் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (10-353-204)

# மாவீரர் தினத்தையொட்டி பனம்விதைகள் நடுகை

புதுக்குடியிருப்பு,நவ.15

மாவீரர் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களால் பாடசாலையை அண்டியுள்ள பிரதேசங்களில் பனம்விதைகள் நடுகை செய்யப்பட்டன.

மாவீரர்களை நினைவுகூரும் வகையிலும், நாட்டில் பனை வளத்தை வளர்க்கும் நோக்குடனும் சுமார் 5 ஆயிரம் பனம்விதைகள் நடுகைசெய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (10-204-353)

# பூதன்வயல் கிராமத்தில் வாசிப்பு விழா

ஒட்டுசுட்டான்,நவ.15

சர்வதேச நூலக வாசிப்பு மாதத்தை முன்னிட்டுப் 'போருட்' நிறுவனத்தின் அனுசரணையுடன் தண்ணீரூற்று, பூதன்வயல் கிராமத்தின் பொதுநோக்கு மண்டபத்தில் அண்மையில் வாசிப்புவிழா நடைபெற்றது.

முல்லை. பொருளாதார அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் கு.சுரேஸ்குமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தமிழீழ தேசியக்கொடியை முள்ளியவளைப் பிரதேச ஊரக வளர்ச்சிப் பணிப்பொறுப்பாளர் வைகுமரன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து முல்லை மாவட்ட போருட் நிறுவனத் திட்ட இணைப்பாளர் கேதீஸ்வரன், முள்ளியவளை ஊரக வளர்ச்சிப் பணிப்பொறுப்பாளர் வைகுமரன் ஆகியோரின் கருத்துரைகள் இடம்பெற்றன.

இதனையடுத்துக் கிராமத்தலைவரிடம் 135 நூல்கள் நூலகப்பொறுப்பாளர் சித்திராவிடம் கையளிக்கப்பட்டன. இந்நிகழ்வில் கிராம மக்கள், நிறுவனப் பணியாளர்கள், விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (10-341-203)

# விவாதச் சுற்றுப் போட்டியில் இணுவில் இந்து. முதலிடம்

யாழ்ப்பாணம்,நவ.15

மாவை சிவநாதம் பட்டிமன்றக் குழுவினர் யாழ்.மாவட்டப் பாடசாலை களுக்கிடையில் நடத்திய விவாதச்சுற்றுப் போட்டியில் இணுவில் இந்துக்கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இரண்டாம் இடத்தினை வேம்படி மகளிர் கல்லூரியும், மூன்றாம் இடத்தினை கொக்குவில் இந்துக்கல்லூரியும் பெற்றுள்ளன.

இவர்களுக்கான வெற்றிக் கேடயத்தை தீபாவளித்தினத்தன்று மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் வைத்து ஓய்வுபெற்ற நீதிபதி மு.திருநாவுக்கரசு வழங்கிக் கௌரவித்தார். (10-13)

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்
05 - 09 - 1976



இறைவன் அடியில்
18 - 08 - 2004

### திருமதி மு.நந்தினி

திதி: துதியை

அன்பின் திருவுருவாய் அமைந்திருந்தீரே!
அந்திப்பொழுது அகல முன்னே
எமையெல்லாம் அலறவிட்டு அரனடி ஏகினீரே!
ஆற்ற வழிதேடித் தோற்றுத் துடிக்கின்றோம்!
தேற்றுவார் யாருமின்றி தினந்தினந் தேம்பியழுகின்றோம்!
மண்ணுலக வாழ்வை விட்டு மறைந்து சென்றீரே!
விண்ணுலக வாழ்விலிப்போது விழித்திருப்பீரே!
காலமெலாம் எமைக் கண்ணீரில் ஆழ்த்திவிட்டு
இறைவனடியில் இணைந்து விட்டீரே அன்னையே!
ஆண்டுகள் பல சென்றாலும் அன்பான நினைவுகள்
அகலாது எமைவிட்டு! உங்கள் ஆத்மசாந்திக்காக
இறைவனை இறைஞ்சுகின்றோம் இன்று!
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

என்றும் நினைவுடன் வாழும்:
தாய், பிள்ளைகள் -
(லதீசன், லஷ்சாயினி),
அண்ணா, அக்காமார், அண்ணி,
அத்தான்மார், மாமா, மாமி,
உற்றார், உறவினர்கள்.

38/1. A.V. றோட்.
கொழும்புத்துறை.
அரியாலை.

(38553) (26-14-45)

## வைத்தியர்கள் பற்றாக்குறை; நோயாளர் சிரமம்

வரணி,நவ.15

மந்திகை ஆதார வைத்தியசாலையில் நிலவும் வைத்தியர்கள் பற்றாக்குறையால் சிசிச்சை பெற வரும் நோயாளர்கள் நீண்டநேரம் காத்திருப்பதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

பிரதி சனிக்கிழமைகளில் 150 நோயாளர்கள் வரை சிகிச்சை பெறுகின்றனர் இவர்களுக்கு ஒரு வைத்தியர் மட்டுமே சிகிச்சையளித்து வருகிறார்.

அதிகாலை தொடக்கம் வந்து காத்திருந்து சிசிச்சைபெற வேண்டியுள்ளதால் இன்னும் ஒரு வைத்தியரை நியமித்து வைத்திய சேவைகளை விரைவில்பெற ஆவன செய்யுமாறு சம்பந்தப்பட்டோரிடம் நோயாளர்கள் வேணடுகோள் விடுத்துள்ளனர்.

(10-204-170)

## பழமரக்கன்றுகள் விநியோகம்

தென்மராட்சி, நவ.15

பளை, இத்தாவில் பகுதியில் மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு உலக தரிசன நிறுவனத்தினர் பழமரக்கன்றுகளை இலவசமாக வழங்கியுள்ளனர்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் தென்னை, மா, தேசி ஆகிய கன்றுகளும் மேட்டு நிலப்பயிர்ச் செய்கைக்குரிய விவசாய உள்ளீடுகளும் வழங்கப்பட்டன.

(10-204-117)

உ
விராட் விஸ்வப் பிரமனே நம

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
08 - 01 - 1935



உதிர்வு
28 - 11 - 2003

அமரர் விஸ்வகுலதிலகர்

### வல்லிபுரம் துரைராசா

திதி: பஞ்சமி

கார்த்திகைத் திங்கள் ஈராறு நாளாம்
பூர்வபக்க பஞ்சமித் திதியில் ஸ்ரீமான்
விஸ்வ குல திலகர் வல்லிபுரம் துரைராசா
இறைவனடி சேர்ந்து ஓராண்டு ஆனதோ?

அன்னை வயிற்றில் உதித்தீர் ஐயா
ஆண்டவன் கருணையில் வளர்த்தீர் ஐயா
இன்பத்தைத் தேடி கைப்பிடித்தீர் ஐயா
ஈசன் செயலால் மழலைகளை வாரினீர் ஐயா
உங்களை ஒரு கணமேனும் நா மறவாது ஐயா
ஊரார் மத்தியில் மதிப்புடன் துரையானீர் ஐயா
எங்கு தேடுவோம் எங்கள் துரையை ஐயா?
ஏங்கி ஏங்கிக் கதறுகிறோம் ஐயா
ஐயன் அளந்த தாற்பரியம் இதுவோ ஐயா?
ஒளிரும் அந்த விளக்கே ஐயா
ஓயாது சுடர் விடும் அந்த விளக்கு ஐயா
ஔடதம் எங்களுக்கு அந்த விளக்கு ஐயா!
*ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!*


அன்னாரது இல்லத்தில் நாளை (16-11-2004) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10. 30 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.7, காரைக்காட்டு வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
T.P.: 222 - 7891

(38621) (26-14-45)

- மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## ஓராண்டு நினைவலைகள்



அன்னை மடியில் 23.02.1935

இறைவன் அணைப்பில் 15.11.2003

ஆண்டொன்று ஓடி மறைந்ததையா!

நீர் என்னை விட்டுப் பிரிந்து சென்றாலும் இன்றே தான் நீர் என்னைப் பிரிந்தது போன்ற துயருடனும், கண்ணீருடனும் ஒவ்வொரு நாளும் கடமை வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். வாழ்ந்த நாள்களில் நீர்செய்த கடமைகள் எத்தனை எத்தனையோ எழுத்தில் அடங்காதவை. நினைத்து நினைத்து மனமுருகி நித்தம் நித்தம் செத்துக் கொண்டிருக்கிறேன். என்றோ ஒரு நாள் என்னையும் உம்முடன் அழைத்துச்செல்வீர் என்ற இனிய நினைவுடன் காத்திருக்கிறேன். எனது காலம் முடியும் வரை, அது வரை உமது ஆத்மா சாந்தியடைய இறைவனிடம் வேண்டி நிற்கிறேன்.

அமரர்

### வெலிச்சோர் மைக்கல்

தங்கள் பிரிவால் துயருறும்: மனைவி.

760(408), ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# புண்களை மட்டுமல்ல... புற்றுநோயையும் ஆற்றவல்ல மஞ்சள்!

மஞ்சளைத் தொடர்ந்து சாப்பிடுபவர்களுக்கு புற்றுநோய் தாக்கும் அபாயம் இல்லை என்று சமீபத்தில் தேசிய அளவில் நடத்தப்பட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.


புற்றுநோய்க்குப் பல காரணங்கள் இருந்தாலும், புகைப் பிடிப்பவர்கள் அல்லது புகையிலை பயன்படுத்துபவர்கள் அதிகமாகப் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர் என்று புற்றுநோய் சிறப்பு டாக்டர்கள் கூறுகின்றனர்.

புற்றுநோயை ஆரம்ப நிலையில் கண்டுபிடித்தால் மட்டுமே பூரணமாக குணப்படுத்த முடியும். ஆனால், இங்கு போதிய விழிப்புணர்வு இல்லாத காரணத்தினால் நோய் முற்றிய நிலையிலேயே டாக்டர்களிடம் வருகின்றனர். அப்படி வந்தாலும் அறுவைச்சிகிச்சை, கதிரியக்க சிகிச்சை, கீமோதெரபி என்று பல சிகிசசைகள் இருக்கிறது. இதன் மூலம் பூரணமாக இல்லாவிட்டாலும் உயிருக்கு ஆபத்து இல்லாமல் நோயாளியைக் காப்பாற்றமுடியும் என்றாலும் பல மாதங்கள், சமயங்களில் சில ஆண்டுகள் தொடர்ந்து எடுக்கவேண்டியிருக்கும்.

தொடர்ந்து மஞ்சளைச் சாப்பிட்டு வந்தால், புற்றுநோய் எந்தக் கட்டத்திலிருந்தாலும் கட்டுப்படுத்த முடியும் என்று சமீபத்தில் தேசிய அளவில் செய்யப்பட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

அகில இந்திய மருத்துவ விஞ்ஞானக் கழகம் மேற்கொண்ட ஆராய்ச்சியின் முடிவில் தெரியவந்துள்ள விவரங்கள்:-

தினந்தோறும் சிறிதளவே சமையலில் பயன்படுத்தப்படும் மஞ்சள் நிறத்திற்காக, வாசனைக்காக மட்டுமல்லாது சிறந்த கிருமிநாசினியாகவும் பயன்படுத்தப்படுகிறது. புற்றுநோயைக் கட்டுப்படுத்தும் மஞ்சள் இருமல், சளி, சிராய்ப்புகள, காயங்கள் போன்ற புண்களை ஆற்றுவதற்கும் பயன்படுகின்றது. இலங்கை, பங்களாதேஷ், தாய்லாந்து, சீனா ஆகிய நாடுகளிலும் மஞ்சள் விளைகிறது.



## சுகநலம்

அஜீரணம், இருதய நோய், இழுப்பு, ஆஸ்துமா மற்றும் நரம்பியல் நோய்களுக்கு மருந்தாகவும் இஞ்சி பயன்படுகிறது. மனிதனின் உடல் வளர்ச்சிக்குத் தேவையான விட்டமின்களின் சத்துக்கள் இந்த வேதிப்பொருள்களில் அதிகம் இருக்கிறது.

உணவுப் பழக்கங்கள், உணவு முறைகளை மாற்றி அமைப்பதன் மூலம் நோய்களை எளிதாகக் குணப்படுத்துவதுடன் உடலுக்குத் தேவையான சக்தியைக் கூடுதலாகப் பெறமுடியும் என்பதும் அறிவியல் பூர்வமாக நவீன மருத்துவ ஆராய்ச்சியில் உறுதிசெய்யப்பட்டு உள்ளது. மஞ்சளில் இருக்கும் குணங்கள் புற்றுநோயைக் குணப்படுத்தவல்லது என்பதும் இந்த ஆராய்ச்சியில் உறுதியாகியுள்ளது.

புற்றுநோய் எந்தக் கட்டத்தில் இருந்தாலும் அதைக் கட்டுப்படுத்தும் தன்மை மஞ்சளுக்கு இருக்கிறது. மஞ்சள் மற்றும் சீரகத்தை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், தோல், மார்பு, வயிற்றுப் பகுதி, விலாப் பகுதியில் உள்ள இரத்த நாளங்களில் ஏற்படும் அடைப்புகளை முழுமையாக தவிர்க்க இயலும். ஆந்திர மாநிலத்தில் செய்யப்பட்ட ஆய்வில் புகைப் பிடிப்பதால் ஏற்படும் புற்றுநோயை, தொடர்ந்து மஞ்சள் சாப்பிடுவதன் மூலம் புற்றுநோயின் பாதிப்பே இல்லாமல் செய்யமுடியும் என்று தெரியவந்துள்ளது.

இந்த ஆய்வில் புற்றுநோயாளிக்கு ஒரு நாளைக்கு ஒருகிராம் வீதம் ஒன்பது மாதங்களுக்குத் தொடர்ந்து மஞ்சள் சாப்பிடக் கொடுத்ததில் புற்றுநோயின் ஆரம்ப அறிகுறிகளை முற்றிலும் கட்டுப்படுத்த முடிந்திருக்கிறது. வாய்ப் புற்றுநோய் மற்றும் நுரையீரல் புற்றுநோய் வந்தவர்களுக்கு ஆரம்ப நிலையில் இருக்கும் போது தொடர்ந்து மஞ்சள் சாப்பிடக் கொடுத்ததால் நோயை முற்றிலும் குணப்படுத்த முடிந்திருக்கின்றது.

மஞ்சள், சீரகம் சேர்த்துத் தயாரிக்கப்படும் மருந்துகள் நுரையீரல் புற்றுநோயை முற்றிலும் குணப்படுத்தும் தன்மை கொண்டது. மஞ்சள், சீரகத்தைத் தொடர்ந்து சாப்பிடுவதால் புகைப் பிடிப்பதால் ஏற்படும் உடல் மாற்றங்களைத் தவிர்க்கமுடியும்.

சீரகத்தில் இயற்கையாகவே புண்களை ஆற்றும் திறன் இருப்பதாகப் பென்சில்வேனியாவைச் சேர்ந்த டாக்டர்கள் அமின், நாஞ்சி செய்த ஆய்வில் தெரியவந்துள்ளது. சீரகத்தின் தன்மை கல்லீரலில் ஏற்படும் புற்றுநோயையும் மது குடிப்பதால் நுரையீரலில் ஏற்படும் மாற்றத்தையும் கட்டுப்படுத்த வல்லது, சமையலில் மஞ்சள், சீரகம் அதிகமாகப் பயன் படுத்தும்போது அதன் இயற்கைத் தன்மை மாறமல் அப்படியே இருக்கிறது. இவ்வாறு ஆய்வின் முடிவுகள் தெரிவிக்கின்றது.

**சுஜித்**

# தைரோயிட் சுரப்பின் குறைபாடும் அதனால் பெண்கள் எதிர்நோக்கும் ஆபத்தும்

எமது உடலின் திறமையான செயற்பாட்டுக்கும் உறுதியான உடற்கட்டமைப்புக்கும் தைரொக்சின் ஓமோன் மிக மிக முக்கிய பங்களிக்கிறது. உடலில் ஏற்படும் இராசாயன மாற்றங்களைக் கட்டுப்படுத்தி உடற்சமனிலையைப் பேணுகிறது.

இச் சுரப்பை சுரக்கும் தைரொயிட் சுரப்பியானது எமது கழுத்தின் முன்பக்கத்தில் அமைந்துள்ளது. இச்சுரப்பி சரியானமுறையில் தொழிற்படாதபோது உடலமைப்பில் சடுதியான மாற்றங்களை ஏற்படுத்தும்.

### கண்டமாலை

*சோழியூரான் பிறைசூடிக்குருக்கள்.*

(38624)

# எதிர்காலம் குறித்து தமிழ்மக்கள் நம்பிக்கை இழக்கலாகாது!

## ஈழவேந்தன் எம்.பி. கூறுகிறார்



யாழ்ப்பாணம், நவ.15 தமிழ் மக்கள் தமக்கு எதிர்காலம் இல்லை என்று நம்பிக்கை இழக்கலாகாது என்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன் கூறினார்.

யாழ்.பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் தமிழ் மாணவர் மன்றத்தில் மன்றத் தலைவர் வி.செ.சஞ்சிகா தலைமையில் நடந்த கூட்டத்தில் ஈழவேந்தன், 'ஈழத்தமிழினத்திற்கு எதிர்காலம் உண்டா' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். இந்நிகழ்வில் கல்லூரி அதிபர் கனகசிங்கத்தின் தொடக்கவுரையை அடுத்து ஈழவேந்தன் தொடர்ந்து பேசியதாவது:-

எமது எதிர்காலம் எவ்விதம் அமையப் போகின்றது என்று சொல்ல முடியாத அளவிற்கு நெருக்கடியான ஏக்கம் நிறைந்த சூழ்நிலையில்தான் நாம் வாழ்கின்றோம். எனினும், எமது நம்பிக்கை நட்சத்திரம் விலைபோக மறுக்கின்ற தலைவன் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வழி நடத்தலில் எந்த நெருக்கடிகளுக்கும் ஈடுகொடுத்து அவர் எமக்கு விடிவையும் விடுதலையையும் பெற்றுக் கொடுப்பார் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. 50 ஆண்டுகளுக்கு மேலாக சிங்கள பேரினவாதத்தால் ஏமாற்றப்பட்ட நிலையும் எமது இனத்தைக் காட்டிக்கொடுகின்ற கயவர்களின் எண்ணிக்கை ஏற்றம் பெற்றிருப்பதும், எம் இனத்திற்கு சோர்வைத் தரலாம். பாரதத்தாயின் அரவணைப்பில் வாழ்வு கிடைக்கும் என்று எண்ணியிருந்த எம்மை ஏமாற்றுகின்ற முறையில் பாரதம் இலங்கை அரசுடன் பாதுகாப்பு ஒப்பந்தங்களைச்செய்து, எம்மை படுகுழியில் தள்ளும் முயற்சி எமக்கு ஏக்கத்தைத் தரலாம். ஆனால், இவற்றைக் கொண்டு எமக்கு எதிர்காலம் இல்லை என்று நாம் நம்பிக்கை இழக்கக்கூடாது.

நம்பிக்கை மலைகளை அசைக்கும் என்று விவிலியமும் உனக்கு ஆண்டவன் மீது நம்பிக்கையில்லை எனினும், உன்மீது நீ நம்பிக்கை வை என்று விவேகானந்தரும் கூறியுள்ளதை நாம் மறவாதிருப்பது நலம். நம் வள்ளுவப் பெருந்தகையோ 'தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சிதன் மெய்வருந்தக் கூலி தரும்' என்று கூறியதோடு தனது குடிசெயல் வகை என்ற பகுதியில் தாம் பிறந்த குடியை உயர்த்த ஒருவன் முயல்வானேயாகில் அவனுக்கு 'தெய்வம் மடிதற்றுத்தான்முந்துறும்' என்று அவர் வழங்கியுள்ள அறிவுரைகள் இந்த நெருக்கடியான காலத்தில் எமக்கு நம்பிக்கை ஊட்டும் மொழிகளாக அமையட்டும்.

மொழி ஓர் இனத்தின் விழி மட்டுமல்ல அது இனத்தின் உயிர். மலையகத் தமிழ்ப் பாடசாலைகள் பல மூடப்படுகின்றன. தமிழ்ப் பாடசாலைகளுக்குச் சிங்கள ஆசிரியர்கள் பலர் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ் மாணவர்களுக்கு சிங்களமே பயிற்சி மொழியாகவும் அமைந்துள்ளது. வடமேற்கில் புத்தளம் தொடங்கி நீர்கொழும்பு வரை இயங்கிய நூற்றைம்பது தமிழ் பாடசாலைகளுக்கு மூடுவிழா நடைபெற்றுள்ளது. உடப்பில் சில பாடசாலைகளும் நீர்கொழும்பில் விஜயரட்ணம் மகா வித்தியாலயம் நீங்கலாக ஏனைய அனைத்தும் மூடப்பட்டுள்ளன. இதை நினைவு கொண்டுதான் 1950 களிலேயே தனிநாயக அடிகளாரால் நடத்தப்பட்ட 'தமிழ்ச்சால்பு' இதழில் தமிழர் சிங்களவர்களாக மாறுகின்றார்கள் - என்று வண. ஞானப்பிரகாசர் அடிகளார் எழுதியுள்ள கட்டுரை எம் ஆழ்ந்த சிந்தனைக்குரியது.

இன்று ஆளும் கட்சியில் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர் பெர்னாண்டோ புள்ளே தன்னை மறந்து ஒரு துயர் தோய்ந்த கதையை அண்மையில் நாடாளுமன்றத்தில் என்னிடம் சொன்னார். நான் உண்மையில் ஒரு தமிழன்தான். என் பெற்றோருடன் இன்னும் நான் தமிழில்தான் பேசுகின்றேன். ஆனால், என் பிள்ளைகளுடன் சிங்களத்தில் பேசுகின்றேன் - என்று கூறினார்.

எனவே, மொழியின் அழிவு இனத்தின் அழிவில்தான் முடியும் என்பதற்கு இதைவிட வேறு விளக்கம் தேவையா? இவற்றின் விளைவாக நீர்கொழும்பில் வாழுகின்ற தமிழர்களின் காதல் மொழியும் தாலாட்டு மொழியும் சிங்கள மொழியாக மாறியுள்ளது. குடித்தொகைக் கணக்கில் இவர்கள் சிங்களவர்களாகக் கணிக்கப்படுகின்றார்கள். மொழியை மிஞ்சுகின்ற அளவிற்கு ஒரு இனத்திற்கு நிலம்தான் நிலைத்த பாதுகாப்பு. பின் ஒரு இனம் தன்னைத்தான் உணர்த்துவதற்கும தனக்குப் பாதுகாப்பைத் தேடிக்கொள்வதற்கும் நிலம்தான் தேவை - என்றும் சொன்னார். (ப)

# சோதிடத்தைப் பின்பற்றினால் வாழ்க்கை நன்கு அமையுமாம்

"எமது உயிர் கர்ப்பத்தில் வந்து வளர்ந்து பிறந்து எப்பொழுது எமது கடைசிக்காலத்தை கழிப்போமோ அதுவரைக்கும் வழிகாட்டக் கூடியது சோதிடம். சோதிடம் வேதத்தின் கண். ஆரம்பத்தில் தேவர்களும் பின்னர் முனிவர்களும் அதன்பின் மனிதர்களும் கையாண்டு வரும சோதிடத்தைப் பஞ்சாங்கமாகக் கணித்து, அதன்படி ஒழுகக் கற்றுத்தந்தவர் ஆரியபட்டர், பராசரர் போன்றவர்களே. எனவே, சோதிடத்துக்கு முக்கியம் கொடுத்து அதன்படி நாம் நடந்தால், வாழ்க்கையில் எல்லாவற்றையும் நன்கு அமைத்துக்கொள்ளலாம்"

பேராசிரியர் இலக்கியக் கலாநிதி பிரம்மஸ்ரீ கா.கைலாசநாதக்குருக்களின் மூன்றாவது ஆண்டு நினைவுப் பேருரையாற்றிய நல்லூர் சிவன் கோயில், ஸ்ரீ முனீஸ்வரம் தேவஸ்தானம் ஆகியவற்றின் பிரதமகுருவும், தர்மகர்த்தாவுமாகிய பிரம்மஸ்ரீ கா.இரத்தின கைலாசநாதக் குருக்கள் - இவ்வாறு கூறினார்.

நல்லூர் சிவன் கோயில் மண்டபத்தில் நியந்த்ரீயினால் ஒழுங்குசெய்யபட்டு, பிரம்மஸ்ரீ ப.கோபால்கிருஷ்ண ஐயர் தலைமையில் "வேதத்தின் நேத்திரம்" என்ற பொருளில் பிரம்மஸ்ரீ. கா.இரத்தின கைலாசநாதக்குருக்கள் நினைவுப் பேருரையாற்றினார். அவர் மேலும் கூறுகையில் -

வேதம் அறிவின் கருவூலம். இதனடிப்படையிலேயே இதனை "அபௌருஷேயம்" என்று அழைப்பர். இது புருஷர்களால் ஆக்கப்படாதது எனப் பொருள் தரும். வேதங்கள் அநாதியானவை, காலங்கடந்தவை, சனாதனமானவை, ஓதுதற்கரிய சிறப்புடைய வேதத்தின் தன்மையை உலகறியும்.

வேதங்கள் கூறும் வாழ்வியலை "தர்மம்" என அழைப்பது மரபு. தர்மம் என்பது காலவழக்கில் இல்வாழ்வில் சுகமாக வாழ்வதற்காக பின்பற்றுவது என்பதாயிற்று. இதினின்று மாறுபாடாக உலகில் பலனை எதிர்பாராமல் பின்பற்றப்படுவதனூடாக மோட்சத்தைத் தர வல்லது ஆகிறது. இதுவே மதம் ஆகும்.

வைதீக தர்மம் என அழைக்கப்படும் எமது மதம் வாழ்க்கையின் பூரணத்துவத்தை அறிவதற்கான வழிமுறைகளைக் காட்டி நிற்கின்றன. அதற்கானதும், அதனை அடைவதற்குமான அறநெறிகள் எவையெவையோ அவைதான் "தர்மம்"

சோதிட சாஸ்திரம் மூன்று ஸ்காந்தங்களைக கொண்டது. இதனால், இதற்கு ஸ்காந்த த்ரயாத்மகம் எனப் பொருள்படும். இதனைப் பற்றி காஞ்சிப்பெரியவர் தமது தெய்வத்தின் குரல் (பாகம்2) என்ற நூலில் கர்க்கர், நாரதர், பராசரர் போன்ற ரிஷிகள் பல சோதிட விளக்கங்களைச் செய்திருக்கிறார்கள். தேவர்கள், ரிஷிகள் மட்டுமல்ல மனிதர்களும் செய்த பல கிரந்தங்களும் உள்ளன. வராஹமிஹிரர், ஆரியபட்டர், பாஸகரராயர் போன்றவர்கள் பல




கிரந்தங்கள் செய்துள்ளனர் - என்று கூறுகிறார்கள்.

சோதிடம் மூன்றுவித பகுப்புக்களைக் கொண்டது. அவை சித்தாந்த ஸ்காந்தம், ஹோராஸ்காந்தம் (ஓரை பற்றிய நூல்) சம்ஹிதாஸ்காந்தம் என்பனவாகும்.

சோதிட சாத்திரத்துக்கு இன்றியமையாதது கணிதம். அதன்படி சித்தாந்த சிஹாந்தத்தினுள வியக்கத்தக்க கணிதங்களாக எண்கணிதம், திரிகோணகணிதம், வரைகணிதம் சேத்திர கணிதம், அட்சரகணிதம் என்பன இடம் பெறுகின்றன. இவை யசுர் வேதமும் வேதங்கள பத்துடனும் இணைந்து சுல்வசூத்திரம் இடம் பெறுகிறது. இச்சுல்வசூத்திரம் யக்ஞங்களைப் பற்றி சொல்லும்போது, யக்ஞம் செய்யவேண்டிய யாகசாலையின் அளவு முறைகளையும், வரைவுகளையும் கூறுவது என்பது மனங்கொள்ளக்கூடிய விடயமாகும்.

சோதிடம் என்பதற்கு "நயனம்" என்ற பெயருண்டு. வேதகர் மாக்களை உருவாக்குவதற்கான காலத்தை நிர்ணயம் பண்ணி, நம்மை அந்தக் காரியத்திற்காக அழைத்துச் செல்கின்ற கண்ணாகவும் அமைகின்றது எனப் பொருள்படும்.

சோதிடம் என்பது நாள், அர்த்தமாசம், மாசம், ருது, வருடம் இவற்றின் பகுப்பைப் பற்றியும் சூரிய, சந்திரர்களின் நிலைகளால் நிகழும் அமாவாசை, பூர்ணிமை பற்றியும் அப்போது நிகழும் கிரகணங்களைப் பற்றியும் நட்சத்திரங்களைப் பற்றியும் கூறும் நூல் ஆகும்.

சோதிடத்துக்கு எமது வாழ்வில் முக்கியம் கொடுத்து வாழ்ந்தால், வாழ்க்கையில் நாம் எல்லாவற்றையும் நல்லபடியாக அமைத்துக் கொண்டு வாழலாம் - எனக் கூறினார். (ப-152)

# வழிதவறும் மாணவரை ஆசிரியர்கள் திருத்தி நல்வழியில் ஈடுபடுத்த வேண்டும்

சிறுவர்களுக்கு ஊட்டும் மனப்பலம் அவர்களின் எதிர்காலம் சிறக்க உதவுகின்றது -

என்று யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை பெற்றோர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசிய இந்து கலாசார அலுவலர் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சிவ.மகாலிங்கம் கூறினார்.

அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் பாடசாலையின் முத்துக்குமாரு அரங்கில் நடைபெற்ற விழாவில் அவர் மேலும் பேசும் போது -

கல்வியில் உயர்ந்த நிலையில் விளங்கிய சமுதாயம் இன்று வீழ்ச்சி நிலைக்குள்ளாகிக் கொண்டிருக்கிறது. இன்றைய சிறுவர்களே நாளைய எமது சமூகத்தின் ஆணிவேர். ஆசிரியர்கள் மாணவர்களைத் தமது பிள்ளைகளாகக் கருதவேண்டுமேயன்றி எதிரிகளாகக் கொள்ளக்கூடாது.

மாணவர்களின் திறமைகளை அவர்களது ஆர்வங்களைக் கண்டு, அதற்கமைவாக உயர் நிலைக்கு இட்டுச்செல்ல வேண்டும். ஞான விளக்குகளான ஆசிரியர்கள், வழிதவறும் மாணவர்களைத் திருத்தி நல்வழியில் வாழவழிகாட்ட வேண்டும்.

இந்து சமயப் பண்பாட்டிற்கு அமைய ஒரு ஆரம்ப பாடசாலையை நடத்திக் காட்ட முடியுமா என ஒரு ஆசிரியர், நான் ஆசிரியராக இருந்த சமயம் என்னிடம் கேட்டார். எனது மனதில் இருந்த இந்தக் கவலை இன்று இல்லை. யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை எமது சமயப் பண்பாட்டின் உச்சக் கட்டத்திலுள்ளது.



மாணவர்களிடம் காணப்படும் உள்ளார்ந்த ஆற்றல்களைக் கண்டுபிடித்து, அவர்களை மேல்நிலைக்கு உருவாக்கித் தந்த உன்னத பணியில் இந்தப் பாடசாலையின் ஆசிரியர்கள் உயர்ந்து நிற்கின்றார்கள் இங்கு ஆரம்பக் கல்வியைப் பயின்று உன்னத நிலையை எட்டி இருக்கும் மாணவர்கள் பலரை நான் அறிவேன் என்று கூறினார்.

அதிபர் ஞானகாந்தன் தமது தலைமை உரையின்போது கூறியதாவது:-

பாடசாலையில் உள்ள இடநெருக்கடி காரணமாக இங்கே அனுமதிகேட்டு விண்ணப்பித்தவர்களில் சிலருக்குச் சந்தர்ப்பம் கிடைக்காமல் போயிருக்கலாம் அப்படியானவர்கள் மனம் வருந்தக்கூடாது. அடுத்த ஆண்டிற்குள் மேல்மாடிக் கட்டட வேலைகள் முடிவடைந்தால், கூடுதலான அனுமதியை வழங்கக் கூடியதாக இருக்கும் கல்வியின் செயற்பாடுகளில் பெற்றோர்களின் பங்களிப்பு முக்கியமானது. பாடசாலைச் சமூகத்துடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைக்கு உதவமுடியும் -என்றார்.

உப அதிபர் எஸ்.தியாகலிங்கமும் உரையாற்றினார்.

கவியரங்கு உட்பட கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (ப-111)

### விருது பெற்ற முதலியாரைப் பின்பற்றினால்

# இப்பிரதேசத்தைப் பொன்கொழிக்கும் பூமியாக மாற்றி அமைக்கலாம்

வடமாகாணத்திலே சிறந்த முதிய விவசாயியாகத் தெரிவுசெய்யப்பட்டு விருதுகளைப் பெற்றுள்ள சி.பொ.வ.மா.க.முதலியாரைப் போல இப்பகுதியில் உள்ள சகல விவசாயிகளும் உற்சாகத்துடன் செயற்பட்டு விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்தால் எமது பிரதேசம் பொன்கொழிக்கும் பிரதேசமாக மாறும்.

சர்வதேச முதியோர் தினத்தையொட்டி விவசாய அமைச்சு நடத்திய முதிய விவசாயிகள் தெரிவில் வடபகுதியின் முதிய விவசாயியாகத் தெரிவுசெய்யப்பட்டுத் தேசிய விருது பெற்ற மானிப்பாய் மேற்கு விவசாயச் சம்மேளனத் தலைவர் சி.பொ.வ.மா.க.முதலியாருக்கு யாழ்ப்பாணம் கமநல சேவைகள் அபிவிருத்தித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட பாராட்டுவிழாவில் பாராட்டுரை வழங்கிய தமிழீழ பொருண்மிய நிறுவனப் பொறுப்பாளர் தேவா மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். கமநல சேவைகள் அபிவிருத்தித் திணைக்கள மண்டபத்தில் கமநல சேவைகள் அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் தலைமையில் பாராட்டுவிழா நடைபெற்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சகல கமநல சேவை நிலையங்களின் குழுத் தலைவர்கள், கமநல திணைக்கள உத்தியோகத்தர்கள் பலரும் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.

விருதுபெற்ற முதலியாருக்குப் பலர் பொன்னாடை போர்த்து, மலர்மாலைகள் அணிவித்துக் கௌரவித்தனர்.

யாழ். மாவட்டப் பொருண்மியப் பொறுப்பாளர் தேவா தமது பாராட்டுரையில்-

அண்மைக்காலமாக யுத்தத்தினால் வடபகுதியில் பல குளங்கள் பழுதடைந்தும் தூர்ந்தும் போயுள்ளன. 50 ஆண்டுகளுக்கு மேலாக வழுக்கையாற்றுடன் சேர்ந்த நீர் வீணாகக் கடலுக்குச் செல்கின்றது. 'நியாப்' திட்டத்தின் கீழ் அரசும் 'நொறாட்' நிறுவனமும் சில குளப் புனரமைப்பு வேலைகளைச் செய்து வருகின்றன. சகல குளங்களும் அடுத்த வருடம் புனரமைப்புச் செய்து மழைநீர் சேகரிக்கப்படடால்தான் காலபோக நெற்செய்கை, மரக்கறிச் செய்கைகள் பூரணமாகச் செய்யமுடியும் - என்று கூறினார்.

கமநல சேவை அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் தனது தலைமையுரையில், யாழ். மாவட்டத்தில் விவசாய ஒய்வூதியத்திட்டத்தில் சேர்ந்து முதல் ஒய்வூதியம் பெற்றவர் முதலியார். பல விவசாயிகளை இத்திட்டத்தில் இணைத்து ஒய்வூதியத்தை ஆயிரம் ரூபா வரை உயர்த்துவதற்காக முன்னின்று உழைத்தவர். வழுக்கையாற்று புனரமைப்புப் பணிகளுக்குத் தம்மை முழுமையாக அர்ப்பணித்துச் செயற்பட்டு வருகிறார். யாழ். மாவட்டத்தில் மூன்று மாதம் வரை கிடைக்கும் மழைநீரைச் சேகரித்து விவசாயம் மேற்கொள்ள சகல குளங்களும் புனரமைக்கப் படவேண்டும். நூறுகோடி ரூபா வரை தேவைப்படும் இத்திட்டத்தைப் பூரணமாகச் செயற்படுத்தினால்தான் எமது நெல் தேவையைப் பூர்த்தி செய்யலாம் - என்றார்.

கமநல சேவைகள் அபிவிருத்தித் திணைக்களத்தைச் சேர்ந்த உருத்திரேஸ்வான் வரவேற்புரையையும் குழந்தைவேல் நன்றியுரையையும் வழங்கினர். (ப-152)

# மாணவர்களின் சினிமா மோகத்தை பெற்றோர் தடுக்க உதவவேண்டும்

பெரும்பாலான மாணவர்கள் இன்று சினிமா மோகம் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். இவற்றில் இருந்து விடுபட பெற்றோர்தான் அவர்களுக்கு உதவவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் சங்கானை கோட்டக்கல்வி அதிகாரி நா.சண்முகசுந்தரம்.

அண்மையில் யாழ்.பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய பரிசளிப்பு விழா இடம பெற்றது. அதில் சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் க.பொ.த. உயர்தரம் கற்கும் மாணவர்கள் தமக்குப் பொருத்தமான துறைகளினைத் தேர்ந்தெடுக்கவேண்டுமெனவும் அவ்வாறு தேர்ந்தெடுத்தால்தான் உரிய இலக்கை அடைய முடியுமெனவும் இவர்களுக்காக ஆசிரியர்கள் மேலதிக நேர வகுப்புக்களை எடுத்து உதவுதல் வேண்டும் என்றும் தெரிவித்தார்.

தொடர்ந்து பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் உரையாற்றும்போது, ஏனைய வலயங்களினைவிட வலிகாமம் கல்வி வலயத்தில் க.பொ.த.சாதாரண மாணவர்களின் பெறுபேறுகள் வீழ்ச்சியடைந்துள்ளன. இதனை முன்னேற்றகரமானதாக்கவேண்டும் என்றால், ஆசிரியர்கள் தம்மை அர்ப்பணித்து மேலதிக நேரங்களில் வகுப்புகளினை நடத்தி மாணவர்களினை கற்றல் செயற்பாடுகளை ஊக்குவிக்க வேண்டும் - என்றார்.

பாடசாலை அதிபர் வி.நடராசா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்னாள் சங்கானை கோட்டக்கல்வி அதிகாரி சி.செல்லையா, யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். (ப-28-203)

# மலேசியாவுக்குத் தப்பிவிடுவார் என்பதால்தான் இரவில் சங்கராச்சாரியார் கைதுசெய்யப்பட்டார்

## விளக்கம் கொடுக்கிறது பொலீஸ் தரப்பு

சென்னை,நவ.15

காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திரர் நேபாளத்துக்குத் தப்பிச் சென்றுவிடுவார் என்ற அச்சம் காரணமாகவே அவரை இரவில் சென்று கைதுசெய்ய வேண்டி ஏற்பட்டது என்று தெரிவிக்கின்றது பொலீஸ் தரப்பு.

காஞ்சி வரதராஜப் பெருமாள் கோயில் முகாமையாளரும் காஞ்சி சங்கர மடத்தில் முன்னாள் பணியாளராக இருந்தவருமான சங்கராமன் அவர் பணியாற்றிய கோயிலுக்குள்ளேயே வைத்து வெட்டிக் கொலைசெய்யப்பட்டது தொடர்பாக கடந்த 11 ஆம் திகதி சங்கராச்சரியார் கைதுசெய்யப்பட்டார். பின்னர் காஞ்சிபுரம் நீதிவான் மன்றில் ஆஜர் செய்யப்பட்ட அவர், 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். உடனடியாக வேலூர் சிறையில் வைக்கப்பட்டார்.

அவரைப் பிணையில் விடுவிக்கவேண்டும் என்று கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது. நேற்றுமுன்தினம் மனு மீதான விசாரணை இடம்பெற்றது. அப்போதே பொலீஸ் தரப்பின் சார்பில் அரச வழக்கறிஞர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சங்கராச்சாரியாருக்குப் பிணை வழங்கினால் அவர் நேபாளத்துக்குத் தப்பிச் சென்றுவிட வாய்ப்புள்ளது என்றும் அவர் கூறினார்.

சங்கராச்சாரியார் நேபளத்துக்குத் தப்பிச் சென்றுவிட்டால் அவரை எளிதில் மீண்டும் இந்தியாவுக்குக் கொண்டுவர முடியாது என்றும் அரசுத் தரப்பு வழக்கறிஞர் சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து, அந்தப்பிணை மனு மீதான விசாரணையை நீதிபதி ஆர். பாலசுப்பிரமணியன நாளைமறுதினம் புதன்கிழமை வரை ஒத்திவைத்தார்.

இந்த விசாரணையின்போது சங்கராச்சாரியாருக்காக இந்திய மத்திய அமைச்சரவையில் முன்னாள் சட்ட அமைச்சராக இருந்தவரான ராம்ஜெத்மலானி ஆஜராகி வாதாடினார்.

ஜெயந்திரருக்கு நீரிழிவு நோய் உள்ளது. உயர் அழுத்த நோயும் உள்ளது. லட்சக்கணக்கானவர்கள் அவரைக் கடவுளாக நினைக்கின்றனர். அத்தகைய நபரைச் சிறையில் காவலில் வைத்திருப்பதன் மூலம் அவரது தனிப்பட்ட சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளது. அவரது சுதந்திரத்தைக் காத்து அரசமைப்புச் சட்டத்தின் மதிப்பை மீண்டும் நிலை நிறுத்த வேண்டும் - என்றார் ஜெத்மலானி.

ஆனால், அரசுத்தரப்பில் இதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. ஜயேந்திரரை பிணையில் வெளியேவிட்டால் சங்கரராமன் கொலை வழக்கின் சாட்சிகளை அவர் மிரட்டுவார் என்றும் சங்கரராமன் குடும்பத்தினரையும் மிரட்டுவார் என்றும் அரசுத் தரப்பில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. இதனை அடுத்தே விசாரணைகளை நீதிபதி ஒத்திவைத்தார்.

நேற்றுமுன்தினம் இந்த மனு மீதான விசாரணை நீதிமன்றத்தில் இடம்பெற்றுக்கொண்டிருந்தபோது, அங்கு வந்த சேர்ந்த இந்து முன்னணி ஆதரவாளர்களுக்கும், வழக்கறிஞர்களுக்கும் இடையில் கடும் சண்டை இடம்பெற்றது.

உயர் நீதிமன்றத்தில் சங்கராச்சாரியாருக்கு உடனடியாகப் பிணை அனுமதி கிடைக்கவில்லை என்பதால் உச்சநீதிமன்றத்தில் அதற்காக மனுத்தாக்கல் செய்யப்போவதாக ராம் ஜெத்மலானி தெரிவித்தார்.

இதேவேளை, காஞ்சி சங்கராச்சாரியார் கைது சம்பவம் தமிழகத்தில் மட்டுமல்லாது இந்தியா முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சங்கராச்சாரியரைக் கைதுசெய்தது முறையற்றது என்று கடும் கண்டனங்கள் தெரிவிக்கப்படுகின்றன. முன்னாள் பிரதமர் வாஜ்பாய் இந்தக் கைதைக் கடுமையாகக் கண்டித்துள்ளார். இந்து அமைப்புகள் பலவும் கைதைக் கண்டித்துப் போர்க்கொடி தூக்கியுள்ளன.

சங்கராச்சாரியாரை உடனடியாக விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி வடஇந்தியாவிலும் நாட்டின் ஏனைய பாகங்களிலும் இந்து மத அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் மறியல் போராட்டத்திலும் உண்ணாவிரதப் போராட்டத்திலும் ஈடுபட்டுள்ளன.

ஜெயேந்திரர் கைது காஞ்சி சங்கர மடத்தை இல்லாது அழித்தொழிக்கும் சதியின் ஒரு பகுதி என்றும் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

இதற்கிடையில் சங்கராச்சாரியாரை நீதிமன்றக் காவலில் இருந்து பொலீஸ் காவலுக்கு மாற்றி, அவரிடம் சங்கரராமன் கொலை குறித்து விசாரணைகளை நடத்தப் பொலீஸார் திட்டமிட்டுள்ளனர். இதற்காக சென்னை உயர் நீதிமன்றத்தில் பொலீஸார் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளனர். இந்த விசாரணைகளின்போது பொலீஸார் சங்கரரை காஞ்சி மடத்துக்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்துவதுடன் மடத்தில் சோதனைகளை நடத்துவதற்கும் திட்டமிட்டுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

இதனால், காஞ்சி மடத்தைச் சேர்ந்தவர்களிடையே பெரும் பீதி பரவியுள்ளது. அத்துடன், இந்த விவகாரம் பெரியளவில் வெடித்துக் கிளம்பும் என்ற அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. (க-3)

## உலக அரங்கில்

# பலூஜாவில் சண்டை ஓய்ந்தது!

பக்தாத், நவ.15

ஈராக்கில் கடந்த சில தினங்களாகக் கடும் மோதல்கள் இடம்பெற்று வந்த பலூஜா நகரத்தில் இப்போது துப்பாக்கிச் சத்தங்கள் ஓய்ந்துள்ளன. ஐந்து நாள் கடும் சண்டையின் பின்னர் நகரத்தைத் தமது முழுக்கட்டுப்பாட்டின் கீழ்கொண்டு வந்துள்ளதாக ஈராக் மற்றும் அமெரிக்கப் படைகள் கூறுகின்றன.

பலூஜா நகர் ஈராக்கியத் தீவிரவாதிகளின் முக்கிய கோட்டையாக விளங்கி வந்தது. வெளிநாட்டுத் தீவிரவாதிகள் உட்பட நூற்றுக்கணக்கான தீவிரவாதிகள் அங்கு பதுங்கியிருந்து அமெரிக்க மற்றும் ஈராக்கியப் படைகள் மீது தாக்குதல்களை நடத்திவந்தனர்.

அவர்களுடன் சமரசம் செய்வதற்கு பல தடவைகள் ஈராக்கிய அரச அதிகாரிகளூடாகவும் இஸ்லாமியத் தலைவர்கள் ஊடாகவும் அமெரிக்கப் படைகள் முயன்றன. ஆனால், அனைத்து முயற்சிகளும் தோல்வியிலேயே முடிந்தன. இதனை அடுத்து பலூஜா நகர் மீது அமெரிக்கப் படைகள் தலைமையிலான மூர்க்கத்தனமான தாக்குதல்கள் தொடங்கப்பட்டது.

ஐந்து நாள்களாக அங்கு தீவிரவாதிகளுடன் கடும் சண்டை நடந்தது. நீண்ட தூர ஆட்லறிகள், விமானங்கள் ஆகியவற்றின் ஆதரவுடன் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இப்போது அங்கு சண்டைகள் முடிவுக்கு வந்து பலூஜா, தமது முழுக்கட்டுப்பாட்டின் கீழ் வந்ததுள்ளது - என்று அமெரிக்க மற்றும் ஈராக்கிய படைகள் அறிவித்துள்ளன.

எனினும், பலூஜாவின் சில இடங்களில் நிலைமைகள் மோசமாகவே இருக்கின்றன என்று அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் றொனால்ட் ரம்ஸ்பீல்ட் சனிக்கிழமை தெரிவித்தார்.

கடும் சண்டையால் பலூஜாவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கான உதவிப் பொருள்களடங்கிய முதலாவது வாகனத் தொடரணி நேற்று அங்கு போய்ச் சேர்ந்தது. அந்தப் பொருள்களை பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்கு அமெரிக்கப் படைகள் தமக்கு உதவிவருகின்றன என்று தொண்டர் நிறுவனப் பணிப்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காகவே நிவாரணப் பொருள் விநியோகத்தில் படையினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் - என்று அமெரிக்கத் தளபதி ஒருவர் தெரிவித்தார்.

பலூஜாவில் சண்டைகள் ஓய்ந்தபோதும் அதன் அருகிலுள்ள ரமாடியாவில் மோதல்கள் தொடர்கின்றன. இதற்கிடையில் வடக்கு நகரான மோசூலுக்கு ஈராக்கிய அரசு அங்கு மேலதிகத் துருப்புக்களை அனுப்பிவைத்துள்ளது. அங்கு கடந்த சில தினங்களாக வன்முறைகள் அதிகரித்திருப்பதை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மோசூலில் நடக்கும் வன்முறைகள் பலூஜாவுக்கும் பரவி விடாத வகையில் அமெரிக்கப்படைகள் தடுப்பு அரன் ஒன்றை ஏற்படுத்துவதில் மும்முரமாக உள்ளன.

பலூஜாவில் தற்போது நிலைகொண்டுள்ள அமெரிக்கப்படைகளின் டாங்கிப் பிரிவின் தளபதி கப்டன் ரொபேர்ட் பொடிஷ் அங்குள்ள நிலை குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், இரண்டு நாள்களுக்கு முன்பு வரை அவர்கள் (தீவிரவாதிகள்) வெளியே வந்து எம்முடன் சண்டையிட்டார்கள். கடந்த இரவு அவர்கள் ஓடிவிட்டனர். அப்படியே அவர்களில் யாராவது இருந்தாலும் நாம் அவர்களை முறியடித்து விடுவோம்' என்றார். (க -3)

# சூறாவளியில் சிக்கியதில் பிளந்தது சரக்குக் கப்பல்!

## 6 பேர் பலி; 9 பேர் காயம்!

டோக்கியா, நவ.15

ஜப்பானில் அடிக்கடி சூறாவளி தாக்கி வருகின்றது. துறைமுகப் பகுதியில் வீசிய சூறாவளிக் காற்றுக் காரணமாக தென்கொரியக் கபபல் ஒன்று விபத்துக்குள்ளாகி இரண்டாகப் பிளந்தது. அதிலிருந்தவர்களில் ஆறு பேர் உயிரிழந்தனர்.

தென்கொரிய சரக்குக் கப்பலான 'ஓசாகா' என்ற கப்பலே இரண்டாகப் பிளந்தது. இந்தக் கபபல் ஜப்பானின் வடக்குப் பகுதித் துறைமுகம் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. டோக்கியோவில் இருந்து ஆயிரத்து '100 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள ஹொக்கைடோ தீவில் கப்பல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அப்போது வீசிய சூறாவளி காரணமாகக் கடல் அலைகள் பயங்கரமாக கொந்தளிக்க ஆரம்பித்தன.

சூறாவளியில் அடித்துவரப்பட்ட சுமார் 5, 500 தொன் நிறையுள்ள ஓசாகா கப்பல் துறைப் பகுதியல் மோதி இரண்டாகப் பிளந்தது. விபதது இடம்பெற்றபோது கப்பலில் 16 பேர் இருந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவர்களில் ஆறு பேர் கடலில் மூழ்கிப் பலியாகினர். ஒன்பது பேர் படுகாயமடைந்தனர். ஒருவரைக்காணவில்லை.

ஜப்பானிய அதிகாரிகள் இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளனர். (க-3)

# நாயைக் கடித்தார் மனிதன்: பிரிட்டனில் விநோதம்!

லண்டன்,நவ.15

நாய் மனிதர்களைக் கடித்த சம்பவங்கள் பற்றி அக்கடி கேள்விப்பட்டிருக்கலாம். ஆனால, நாயை மனிதன் கடித்த சம்பவம் ஒன்று லண்டனில் இடம்பெற்றுள்ளது.

பொலீஸ் நாய் ஒன்றையும் அதன் பராமரிப்பாளரான பொலீஸ் கான்ஸ்டபிளையும் கடித்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் ஒருவரைத் தாங்கள் கைது செய்துள்ளனர் என்று கன்ஸாஸ் நகரப் பொலீஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரைக் கைதுசெய்ய முயன்ற சமயமே அந்த நபர் பொலீஸ் நாயையும் அதன் பராமரிப்பாளரையும் கடித்துள்ளார் என்று உள்ளூர்ப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது.

அந்த நபர் பொலீஸ் அதிகாரியான டேவிட் மக்ரூடர் மீது முதலில் குத்துவிட ஆரம்பித்தார். உடனடியாகப் பொலீஸ் காரில் இருநத தனது நாயை மக்ரூடர் வெளியே விடுவித்தார்.

சோடி என்ற அந்த நாய் பாய்ந்து சென்று குறிப்பிட்ட நபரைப் பிடித்தது. அவர் திமிறவே அது அவரைக் கடித்து விட்டது. உடனடியாக அந்த மனிதர் நாயைத் திருப்பிக் கடித்தார். இதனால் நாயின் காதின் அருகே காயம் ஏற்பட்டது. அத்தோடு, தன்னைக் கைதுசெய்ய முயன்றது மக்ரூடரையும் அந்த நபர் கடித்துள்ளார்.

தகவல் அறிந்து வேறு பொலீஸ் அதிகாரிகள் அந்த இடத்துக்கு விரைந்து வந்து துப்பாக்கி முனையில் சந்தேகநபரைக் கைது செய்யும்வரை இந்தக் கடிபிடி சண்டை இடம் பெற்றுள்ளது.

பின்னர் பொலீஸ் நாய் மிருக வைத்தியரிடம் சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்பட்டது. அதன் காதில் அருகே ஒரு சிறு துண்டு கடித்து எடுக்கப்பட்டுள்ளது என்று அங்கிருந்த மருந்துவர்கள் தெரிவித்தனர்.

சந்தேகநபரால் கடிக்கப்பட்ட பொலீஸ் அதிகாரியான மக்ரூடரும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். "என்னுடைய நாயுடன் இதற்கு முன்னரும் பலர் சண்டையிட்டுள்ளார்கள். எனினும், அவர்களில் எவரும் நாயைக் கடித்தது இல்லை" - என்றார் மக்ரூடர்.

சந்தேகநபர் மீது பொலீஸாரைத் தாக்கியது உட்பட மூன்று குற்றச்சாட்டுக்கள் சுமத்தபட்டுள்ளன. (க-3)

# பலஸ்தீன நாடு அமைய புஷ், பிளயர் ஆதரவு

பலஸ்தீனத் தனிநாடு உருவாவதற்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் வில்லியம் புஷ்ஷும் பிரிட்டிஷ் பிரதமர் பிளயரும் மீண்டும் தமது ஆதரவைத் தெரிவித்தனர்.

அமெரிக்காவுக்கு விஜயம் செய்துள்ள பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் நேற்றுமுன்தினம் வெள்ளை மாளிகையில் அதிபர் புஷ்ஷைச் சந்தித்துப் பேசினார். அதன் பின்னரே இரு தலைவர்களும் பலஸ்தீனத் தனிநாட்டுக்கான தமது ஆதரவைத் தெரிவித்தனர்.

பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தின் மறைவு குறித்தும் அவரது மறைவால் பலஸ்தீனத்தில் இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்தும் இரு நாட்டுத் தலைவர்களும் விரிவாக ஆராய்ந்தனர்.

இஸ்ரேலுடன் சமாதானம், பாதுகாப்பு, மத சகிப்புத்தன்மை ஆகியவற்றோடு இணைந்து பலஸ்தீனர்கள் வாழவும் அவர்கள் சிபாரிசுசெய்தனர்.


## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 09 – 08 – 1935



மறைவு 12 – 11 – 2003



**அமரர் குழந்தை தர்மலிங்கம்**

(சாரதி EY 3311)

சீரும் சிறப்பும் தந்து
பாரினில் உள மகிழ்வு தந்து எமை
வாழ வைத்த எம் தெய்வமே!
ஆண்டு ஒன்று சென்றிடினும் உம்
யாண்டும் நினைவலைகள் மறக்கொணாதே!

**இன்று (15.11.2004) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.**

**சத்திரங்கை,**
**கம்பர்மலை,**
**வல்வெட்டித்துறை.** (38625)(29-15-45) - குடும்பத்தினர்.

குடாநாட்டில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம் தேங்கியுள்ளதுடன் குடிசைகளில் வசிப்பவர்களும் இதனால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். யாழ் - மானிப்பாய் வீதியில் உள்ள கல்லுப்புறா வயல் பகுதியில் மழைவெள்ளத்துக்குள் வாழ்க்கை நடத்தும் மக்களைப் படங்களில் காணலாம். (படங்கள்:தீபன்)

## சமய தீட்சை வழங்கும் நிகழ்வு

கொடிகாமம்,நவ.15

கச்சாய் புங்கடிப்பிள்ளையார் ஆலயத்தில் இன்று காலை 9 மணிமுதல் சமய தீட்சை வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

சிவஸ்ரீ த.வீரபத்திரசிவக்குருக்கள் சமய தீட்சை வழங்குவார். (எ-74)


## பெண் கணக்காளர் தேவை

கொழும்பில் உள்ள எமது நிறுவனத்துக்கு கணனி அனுபவமுள்ள பெண் கணக்காளர் தேவை. (30 வயதுக்கு மேற்பட்டவர்) தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
திரு.எஸ்.தர்மராஜா
No.34, E.S.Fernando Mawathe,
Colombo - 06
☎ - 0114512135
(38631)(43-16-17)


# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை



மண்கும்பானைப் பிறப்பிடமாகவும் இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தாமோதரம் பிளளை அவர்கள் நேற்று (14.11.2004) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - சரஸ்வதி தம்பதிகளின் அருமை மகனும் அமரர் மாணிக்கத்தின் அன்புக் கணவரும் அமரர் கணபதிப்பிள்ளை ஆச்சிமுத்துவின் மருமகனும் நாகம்மா, அமரர் சின்னம்மாவின் அன்புச் சகோதரரும் அமரர் இராசரத்தினம், சரஸ்வதி, கமலாம்பிகை, சந்திரா, சிவயோகநாதன் (டென்மார்க்),சோமசேகரம் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் அமரர் ஏரம்பமூர்த்தி, பிறேமாவதி, விவேகானந்தராசா, சிவசுப்பிரமணியம், மலர்மணிதேவி (டென்மார்க்), புஸ்பகலா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஈசன்(லண்டன்), அமரர் நேசன், ஜெயசுதா (ஜேர்மனி), தீசன் (லண்டன்), யோகேஸ்வரன், சர்வேஸ்வரன், கஜந்தன், சுசந்தன், சுகந்தன், நிரஞ்சன் (லண்டன்), சுமித்திரா, துஷ்யந்தன், நந்தினி, சிவனுஜா, அஸ்வினி, அபினயா (டென்மார்க்), கோபிகா, கோகுலன், கோப்பிரியா, கோகுலதாஸ், கோசலா, கோபிகிருஷ்ணன் ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று(15.11.2004) திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மண்கும்பான் சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.22, இராசாவின்தோட்டம், யாழ்ப்பாணம்.*
(38635)(32-43-16-17)
தகவல்: குடும்பத்தினர்.

## திருமதி நவமணி சின்னத்துரை



யாழ்ப்பாணம், நல்லூரைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவமணி சின்னத்துரை 08.11.2004 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - செல்லமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ் சென்ற சின்னத்துரை (ஓவசியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திரு.திருமதி சின்னத்தம்பி அவர்களின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் பத்மதேவி, இந்திராதேவி, (Colombo), யோகநாதன்(Italy), சிவரஞ்சனி (Colombo), மனோகரநாதன் (Italy), சுகிர்தாதேவி, நிர்மலாதேவி (Germany) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மகேந்திரராஜா (U.K), ஜெகேந்திரன் (U.K), தேவதாஸ் (Canada), ராஜினி (Italy), தர்மேந்திரன் (நிதி உதவியாளர், தீவக வலயக்கல்வித் திணைக்களம்), ஞானசேகரம் (Germany) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, குமாரசாமி, பொன்னுச்சாமி மற்றும் மனோன்மணி (Canada), துரைசிங்கம் (இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தர்,Canada), பூமணி (France), ராஜலஷ்மி (Colombo) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சைலஜா (இறுதிவருட மாணவி, வணிகத்துறை யா/பல்கலைக்கழகம்), சாமினி (Computer Operator, Food City), தனுஜா (மாணவி, வேம்படி மகளிர் கல்லூரி), சுலக்ஷன் (Colombo), பிரதீப், பிரவீன், பிரபு (Germany), வர்சன் (Italy) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.11.2004 வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொன். தர்மேந்திரன் (மருமகன்)
(நிதி உதவியாளர், தீவக வலயக் கல்வித் திணைக்களம்)
சுகிர்தாதேவி தர்மேந்திரன் (மகள்).

*இல.10, செல்லர் லேன், செம்மணி வீதி, நல்லூர்.*
(38632)(32-17-14)

## உலர் உணவு நிவாரணம் வழங்க நடவடிக்கை

வலி.தென்மேற்கு,நவ.15

பண்டத்தரிப்பு பல நோ.கூட்டுறவுச் சங்கம் சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாது இடம்பெயர்ந்து வந்து வசித்து வரும் குடும்பங்களுக்கு மூன்று மாதங்களுக்கான இலவச உலர் உணவு நிவாரணத்தை விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

மே, ஜூன், ஜூலை ஆகிய மாதங்களுக்கான இடம் பெயர்ந்தோருக்கான உலர் உணவு நிவாரணமே இவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை - தங்கள் சொந்த இடங்களில் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு ஒரு மாத நிவாரணமும் விரைவில் வழங்கப்படவுள்ளது. (எ-135)

## மாவீரர் நாள் விவாதச்சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம்,நவ.15

மாவீரர் நாளை முன்னிட்டு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினால் நடத்தப்படும் விவாதச் சுற்றுப்போட்டி நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு மாணவர் பேரவையின் கேட்போர் கூடத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எனவே, பதிவு செய்த விவாத அணிகள் அன்றையதினம் காலை 9.00 மணிக்கு சமுகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (எ)

## வீடுகளுள் வெள்ளம் புகுந்தது

தென்மராட்சி,நவ.15

நாவற்குழி பள்ளம் பகுதியில் உள்ள குளம் நிரம்பி வழிவதால் அப்பகுதியிலுள்ள குடியிருப்புக்களுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது. இதனால், அப்பகுதி மக்கள் தமது இடங்களை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தக்குளம் நிறைந்துள்ளதால் இப்பகுதியில் உள்ள காணிகள் வீதிகளில் ஒரு அடிக்கு மேல் வெள்ளம் தேங்கியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் என்ரவிராஜ் கடந்த வாரம் இதனை நேரில் சென்று பார்வையிட்டார். (எ-203-117)


நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
குளிரூட்டப்பட்டது.
தனுஷ்,வுஸ்லி,பிரியா நடித்த
ட்ரீம்ஸ் (ரீல்ஸ)
காட்சி நேரம் 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
(சி-38673)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக
சரத்குமார், நிகிதா, வடிவேல் நடித்த
டொல்பி ஒலி அமைப்புடன்
சத்ரபதி

தினசரி 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)

லக்சுமி சினிமா இணுவில்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக
சிம்பு (இருவேடம்),ஜோதிகா, கவுண்டமணி நடிப்பில்
மன்மதன்

தினசரி: 11.00,3.00, 7.00, 10.00 புதிய நேரம்
பதிவு ஆசனம்: 0776592008
(38480)

ராஜா யாழ்ப்பாணம்
அஜித் + அஜித், பூஜா நடித்த
அட்டகாசம் (ரீல்ஸ்)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30.
ரிக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம். (சி-38750)

நிரஞ்சனாஸ் சங்கானை
ரவிகிருஷ்ணா, சோனியா அகர்வால் நடித்த
7/G ரெயின்போ காலனி (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசநாயகம் தவமணிதேவி

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசநாயகம் தவமணிதேவி அவர்கள் அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசநாயகம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற துரைராஜா - செல்லம்மா ஆகியோரின் அன்பு மகளும் ஸ்ரீஸ்கந்தராசா (ஜேர்மனி), காலஞ்சென்ற இராசராசன் (ராஜு) ஆகியோரின் அன்புத் தாயாரும் பிரபாநிதியின் (ஜேர்மனி) மாமியாரும் பாலசுந்தரம், குணபாலசிங்கம், கமலாதேவி, பத்மநாதன், பவளராணி, விமலாதேவி, வன்மளாதேவி, கருணாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் திரு.திருமதி முத்துத்தம்பியின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2004) திங்கட் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஒரு மணிக்கு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.* (38633(43-14-17)
தகவல்: இ.ஸ்ரீஸ்கந்தராசா (மகன்).

## சண்முகம் சம்பந்தன் (குணசம்பந்தர்)

**(ஓய்வுபெற்ற சீ. கூட்டுத்தாபன உத்தியோகத்தர், காங்கேசன்துறை)**

குப்பிளானைச் சேர்ந்த சண்முகம் சம்பந்தன் (குணசம்பந்தர்) அவர்கள் நேற்று (14.11.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சாரதாதேவியின் அன்புக் கணவரும் சிறிதரன் (கனடா), கங்காதரன் (கனடா), தயாவதி, பகீரதன் (இத்தாலி), தயாளினி (தாதியர் - யாழ்.போதனா வைத்தியசாலை), சத்திதரன் (பழைய மாணவன் - யாழ். இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் நீலாவதி, வைத்தீஸ்வரன், லோகநாயகி, சதானந்ததேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சதீஸ்குமார் (உத்தியோகத்தர், தலைமைக் காரியாலயம் - யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்), நந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரியங்கா, பிரஸ்திகா, பிரவின், பானுஜா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2004) திங்கட் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பு,தவுடல் பி.ப. ஒரு மணிக்கு தகனக்கிரியைக்காக குப்பிளான் காடாகரம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'தயா பவனம்' மிந்திரை, குப்பிளான்.* (38634(43-14-17)
தகவல்: சாரதாதேவி (மனைவி).

## திருமதி நடராசா பரமேஸ்வரி

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் வீரபத்திரர் கோயிலடி, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா பரமேஸ்வரி நேற்று (14.11.2004) ஞாயிற்றுக்கிழமை நீர்வேலியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி - இலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பர் - பருவதம் தம்பதியினரின் அன்பு மருமகளும் சுப்பர் நடராசா அவர்களின் அருமை மனைவியும் மனோரஞ்சினி, கலாரஞ்சினி, ஜெயாரஞ்சினி, லோகேஸ்வரன், பிறேமா, வசந்தா, விக்னேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் பொ.சண்முகபாலன், சி.கந்தையா, நா.அருந்தவராசா, மு.திருக்கோணேஸ்வரலிங்கம், ப.வினோராஜ், திருமதி கௌரி, திருமதி ரஜனி ஆகியோரின் அருமை மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2004) திங்கட் கிழமை நண்பகல் 12 மணியளவில் நீர்வேலியில் உள்ள அவரது மகளுடைய இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி வடக்கு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராஜ வீதி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி.* (38630)(43-29-15-45)
தகவல்: சு.நடராசா (கணவர்), (சு.ந).

## திருமதி வைத்திலிங்கம் அழகம்மா



கம்பர்மலை, உடுப்பிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் அழகம்மா நேற்று (14.11.2004) ஞாயிற்றுக் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் அமரர் கந்தையா வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும் பூபாலசுந்தரம் (J.P., ஓய்வுபெற்ற அதிபர்) இராசசுந்தரம் (திருமலை), அழகலிங்கம் (ஜேர்மனி), தியாகலிங்கம் (கனடா), நவீந்திரராசா (கனடா), திருமதி த.ஈஸ்வரி, திருமதி சி.இராசேஸ்வரி, திருமதி ச.பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2004) திங்கட் கிழமை காலை 10 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் ஊரிக்காடு இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*கம்பர்மலை.*
(சி-39046)(43-15-45)
தகவல்: வை.பூபாலசிங்கம், (J.P.ஓய்வுபெற்ற அதிபர்).



கொடிகாமத்தில் நேற்று இராணுவத்தினரின் பவுஸர் மோதியதில் பரிதாபகரமாக உயிரிழந்த வரதராஜக் குருக்கள் அரிஹர சர்மாவின் உடல் சம்பவ இடத்தில் கிடந்தபோது.....

# இராணுவ பவுஸர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடக்க பவுஸர் அவரது மோட்டார்சைக்கிளை வீதியின் வலதுபுறம் வரை இழுத்துச்சென்றுள்ளது. பவுஸரின் சில்லு ஏறி சிதைந்த சர்மா அந்த இடத்திலேயே மரணமானார்" என்று அந்த சம்பவ இடத்தில் கூடியிருந்தவர்கள் தெரிவித்தனர்.

விபத்தில் சம்பந்தப்பட்ட பவுஸரில் இருந்த படையினர் இறங்கி வந்து சர்மாவின் உடலை அங்கிருந்து அகற்ற முயன்றனர் என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

உடனடியாக அங்கு கூடியிருந்த நூற்றுக்கணக்கான பொதுமக்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அத்துடன், சம்பவ இடத்துக்கு வந்த பொலீஸாருடனும் இராணுவத்தினருடனும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்; படையினரின் செயலுக்கு எதிர்ப்பும் தெரிவித்தனர்.

இராணுவத்தினர் பொறுப்பற்ற விதத்தில் நடந்துகொள்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பொதுமக்கள் அப்பகுதியில் போக்குவரத்தைத் தடை செய்தனர். கண்டி வீதியால் வந்த பஸ்கள் அனைத்தும் மறிக்கப்பட்டு வீதியின் குறுக்கே நிறுத்தப்பட்டுப் போக்குவரத்துத் தடுக்கப்பட்டது. இதனால், அங்கு பதற்றம் ஏற்பட்டது. படையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

இதற்கிடையில், ஆத்திரமடைந்த பொதுமக்கள் சிலர் விபத்தில் சம்பந்தப்பட்ட பவுஸரைப் பெற்றோல் ஊற்றிக் கொளுத்தினர். பற்றி எரிந்த பவுஸரை அங்கு கூடியிருந்த பொலீஸாரும் படையினரும் பவுஸருக்குள் இருந்த தண்ணீரைத் திறந்துவிட்டு அதன் மூலம் அணைத்தனர்.

இதனைப் பார்த்த இளைஞர் கூட்டம் கொந்தளிக்க ஆரம்பித்தது. அதனை அடுத்து பொலீஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசி கூட்டத்தினரைக் கலைக்கப் பார்த்தனர். அத்துடன், தடியடியும் நடத்தினர். சிலர் துப்பாக்கிப் பிடிகளாலும் தாக்கப்பட்டனர்; இதனால் அந்த இடத்தில் பெரும் களேபரம் ஏற்பட்டது.

பொலீஸாரின் தாக்குதலை அடுத்து பொதுமக்களும் பதில் தாக்குதல் நடத்தினர். பொலீஸாரை நோக்கி அவர்கள் கற்களை எறிந்து தாக்கினர். இதனை அடுத்து பொலீஸார் அவர்களை விரட்டி விரட்டித் தாக்கினர்.

சம்பவத்தை அறிந்த கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளும், தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவிராஜ் மற்றும் கஜேந்திரன் ஆகியோரும் அந்த இடத்திற்கு வந்துசேர்ந்தனர். அவர்கள் பொலீஸாருடனும் படையினருடனும் பேச்சு நடத்தினர்.

இந்தச் சம்பவத்தில் ஆத்திரமடைந்திருந்த பொதுமக்களில் சிலர் அங்கு நிறுத்தப்பட்டிருந்த பொலீஸாரின் மோட்டார்சைக்கிளைப் பெற்றோல் ஊற்றிக் கொளுத்தினர். இதனால் ஆத்திரமடைந்த பொலீஸார் பாய்ந்து பொதுமக்களைப் போட்டுத் தாக்கினர்.

**பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டனர்**

அத்துடன், அங்கு கூடியிருந்த பத்திரிகையாளர்களையும் பொலீஸார் தாக்கினர். பத்திரிகையாளர்கள் வைத்திருந்த புகைப்படக் கருவிகளும் பறிமுதல் செய்யப்பட்டன. இதனால், அந்தப் பகுதி சிறிது நேரம் பெரும் போர்க்களம் போன்று காட்சியளித்தது. எரிக்கப்பட்ட டயர்களாலும் கண்ணீப் புகைக்குண்டுகளாலும் அங்கு ஒரே புகை மூட்டமாக இருந்தது. பொலீஸாரின் தாக்குதலில் சிக்கி 10 பேர் வரையிலானோர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. அவர்களில் சிலர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர். இந்தக் களேபரத்தில் ரவிராஜ் எம்.பியின் வாகனக் கண்ணாடிகளும், கண்காணிப்புக் குழுவினரின் வாகனக் கண்ணாடிகளும் சேதமாகின.

பகல் 1.30 மணியளவில் சாவகச்சேரி பதில் நீதிவான் சு.கந்தசாமி அந்த இடத்திற்கு வந்தார். சடலத்தைப் பார்வையிட்டு விபத்துக் குறித்து விசாரணைகளை நடத்தினார். விரிவான விசாரணைகளை நடத்துமாறு பொலீஸாருக்கு உத்தரவிட்டதுடன் சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லுமாறும் பணித்தார். அதன் பின்னரே அங்கு நிலைமை கட்டுக்குள் வந்தது.

இந்தக் களேபரத்தால் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2.30 மணிவரை கண்டி வீதியூடான போக்குவரத்து மிருசுவில் சந்தி முதல் கொடிகாமம் சந்திவரை தடைப்பட்டிருந்தது. முகமாலைக்குச் சென்ற பஸ்கள் அனைத்தும் மீசாலை - கச்சாய் வீதியூடாகக் கொடிகாமத்தை அடைந்து அங்கிருந்து மேற்கொண்டு பயணத்தைத் தொடர்ந்தன.

(எ-க-6-31-74)

## தமது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டைப்பற்றியோ அல்லது நாட்டு மக்களைப் பற்றியோ அக்கறை இல்லை. நாட்டை ஆளும் அதிகாரம் தன்னிடமே இருக்கவேண்டும் என்பதிலேயே மிகவும் அக்கறையுடன் செயற்படுகின்றார் அவர்.

நேற்று அவர் தனது பத்தாண்டு சர்வாதிகார ஆட்சி நிறைவைக் கொண்டாடினார். இவர் இந்தப் பத்தாண்டு காலத்தில் பல சாதனைகளைப் படைத்துள்ளார்.

41 ஆயிரம் இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மத்தியவங்கி, கட்டுநாயக்க விமான நிலையம், கொலன்னாவை எண்ணெய்த் தாங்கிகள் அனைத்தும் தகர்க்கப்படும் நிலை நேரிட்டது. இதனால் பல ஆயிரம் கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டது.

அதேபோன்று இயற்கையாக மட்டுமில்லாமல் அரசியலிலும் இடி - மின்னல், யுத்தம், விலைவாசி அதிகரிப்பு பசி-பட்டினி என்பன இவருடைய ஆட்சியில் சர்வசாதாரணமாக இடம்பெற்றன.

உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் பொய் சொல்வதிலும் ஏமாற்றுவதிலும் மிகவும் கெட்டிக்காரர் என்ற விருதையும் அத்துறைகளில் டிப்ளோமாவையும் பெற்று அவர் சாதனை படைத்துள்ளார்.

சம்பள உயர்வு வழங்குவேன், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவேன், அனைவருக்கும் தொழில் வழங்குவேன் என்றெல்லாம் வாக்களித்துவிட்டு இன்று அவற்றை நிறைவேற்ற முடியாமல் திணறுகின்றார்.

எனவே, நாட்டு மக்களிடம் மேலும் இரண்டு வருடங்கள் அவகாசம் கேட்கின்றார்.

இப்படியாக அதிமுக்கியமான மக்கள் பிரச்சினைகளை எல்லாம் உதாசீனப்படுத்திவிட்டு தனது அதிகாரத்தை நீடிப்பதிலேயே ஆர்வத்துடன் செயல்படுகின்றார் ஜனாதிபதி.

இதற்கு நாம் ஒருபோதும் இடம்கொடுக்கமாட்டோம். 2005 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் தான் சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தின் இறுதி.

அதற்கு மேல் ஒரு வினாடி கூட ஆட்சியை நீடிக்க அவர் முயன்றால் நாட்டில் ஏற்படும் விபரீத அனர்த்தங்களுக்கு எல்லாம் ஜனாதிபதியே பொறுப்பேற்கவேண்டி நேரும் என்று அவர்கள் கூறினர். (எ-க)

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்கு காரணமே இந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைவின் அடிப்படையில் பேசுவதற்கு அது முன்வந்தமைதான். அந்த யோசனையைக் கண்டித்து ஆயிரக்கணக்கான மக்களை வீதிக்கு இறக்கி எதிர்ப்புத் தெரிவித்த நாம், இன்று அதை ஆதரித்தால் சிங்கள மக்களின் துரோகிகளாகி விடுவோம். அவர்கள் எம்மை ஆட்சிபீடம் ஏற்றியதே விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி சபை யோசனையைத் தோற்கடிப்பதற்கேயாகும்.

நாட்டையும் நாட்டு மக்களையும் காட்டிக் கொடுப்பதற்கு நாம் துணைபோகமாட்டோம். (எ-க)

## பத்திரிகையாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காப்பதாக இலங்கை அரசு, சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் சொல்லிக்கொள்ளுகின்ற அதே நேரத்தில், தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் எந்தவொரு மாற்றமுமின்றித் தொடர்கின்றன.

தமது அன்றாடப் பணிகளான சுயாதீனமான செய்தி சேகரிப்பிலும், அச்செய்திகளை வெளியிடுவதிலும் தமிழ் ஊடகவியலாளர்களிற்குள்ள நெருக்கடிகள் மாற்றமேதுமின்றியே இருக்கின்றன.

ஊடகவியலாளர்கள் தாக்கப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எதிர்வரும் காலங்களில் அவ்வாறான அசம்பாவிதங்கள் இடம்பெறாதென உறுதி கூறப்படுகின்றது. ஆனால், அவ் உறுதி மொழிகள் என்றுமே உரிய தரப்புக்களால் கடைப்பிடிக்கப்படுவதில்லை.

இந்நிலையில், நேற்றைய தினம் தென்மராட்சியின் கொடிகாமம் பகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின்போது, செய்திசேகரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர்கள் பாதுகாப்புத் தரப்பினரால் தாக்கப்பட்டமையினை எமது சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

என்று அதில் உள்ளது. (எ)

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், அப்படி ஏதும் நடக்கவேயில்லை. புதிய செய்தி எதனையும் ஜனாதிபதி அனுப்பவில்லை. அவர் தமது பழைய நிலைப்பாட்டிலேயே உள்ளார் என நோர்வே வெளிவிவகார அமைச்சரை கிளிநொச்சியில் சந்தித்த பின்னர் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருந்தார்.

அமைதிப் பேச்சை ஆரம்பிக்க வழிசெய்யும் விதத்தில் கருத்து நிலைப்பாடு ஒன்றை (Formula) தாங்கள் நோர்வேத் தரப்பு ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளனர் என்றும் அப்போது பாலசிங்கம் தெரிவித்திருந்தார்.

அதற்குச் செய்தி என்ன என்ற விவரம் தற்போது வெளியாகியுள்ளது. புலிகள் நோர்வேத் தரப்பு ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பிய செய்தி இதுதான் -

ஜனாதிபதி குமாரதுங்கவோடு பேச்சு என்றாலும், அரசுத் தலைவி என்ற முறையிலேதான் அந்தப் பேச்சு நடைபெறும். அவர் ஜனாதிபதி என்ற முறையில் அல்ல.

ஏனெனில், இலங்கை அரசுடன்தான் பேச்சே தவிர, தனித்து ஒரு பதவியில் இருப்பவருடன் அல்ல.

எனவே, பேச்சு நடத்த முன்னர் அரசின் ஒருமித்த - இணக்கமான - ஒத்திசைவான - நிலைப்பாடு என்னவென்பது பகிரங்கமாக வெளிப்படுத்தப்படவேண்டும். அப்படியில்லாமல் சமாதான முயற்சி என்று பேசிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

முதலில், சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு பேச்சு முயற்சிகள் தொடர்பாக உள்ள கொள்கை நிலைப்பாடு பகிரங்கப்படுத்தப்படவேண்டும்.

இனப்பிரச்சினை தொடர்பாக இந்த அரசுக்கு இணக்கமான - ஒத்திசைவான - கொள்கையோ, கோட்பாடோ இல்லை. முரண்பாடுகளே உள்ளன.

பேச்சு முயற்சியை ஆரம்பிப்பதாயின், அதற்கு முதலில் அரசு தனது ஒருமித்த கொள்கை நிலைப்பாட்டை - அது கூட்டமைப்பு அரசின் நிலைப்பாடு எனப் பகிரங்கப்படுத்தி - பிரகடனப் படுத்தவேண்டும்.

நாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைவு, அதனடிப்படையில் பேச்சைத் தொடங்குதல், வடக்கு - கிழக்கில் யுத்தத்தால் பாதிப்புற்ற மக்களின் அன்றாட - அவசர - மனிதாபிமானத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய இடைக்கால ஏற்பாடு ஒன்றை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக அரசின் ஒருமித்த கொள்கை நிலைப்பாட்டை அரசுத் தலைவி என்ற முறையில் ஜனாதிபதி வெளியிடவேண்டும்.

அரசுக் கூட்டமைப்பின் கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஜனாதிபதி மூலம் தெளிவான கொள்கைப் பிரகடனம் ஒன்றை வெளியிட்டால், அதை வைத்துக்கொண்டு பேச்சுக்களை ஆரம்பிக்க வாய்ப்புண்டா என்று நாம் முடிவுசெய்யலாம்.

பேச்சு முயற்சிகள் தொடர்பாக எமது கொள்கை நிலைப்பாட்டை நாம் வெளியிட்டுவிட்டோம்.

அரசுத் தரப்பின் நிலைப்பாடுதான் இனி தெளிவுபடுத்தப்படவேண்டும்.

ஜனாதிபதியின் நிலைப்பாட்டை நாம் அறிந்து கொள்வதில் அர்த்தமில்லை. அரசின் நிலைப்பாடே இன்று அவசியப்படுகின்றது.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைவின் அடிப்படையில் பேச்சை ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதி குமாரதுங்க புதிதுபுதிதாக நிபந்தனைகளைப் போடுகின்றார். அவை ஏற்க முடியாதவை.

எனவே, அரசின் உத்தியோகபூர்வ கொள்கைப் பிரகடனத்தை வெளியிட்டு, பேச்சுக்கான சுமுக நிலையை ஏற்படுத்துங்கள்.

இதுவே நோர்வேத் தரப்பு ஊடாகப் புலிகள் ஜனாதிபதிக்குக் கொடுத்த புதிய செய்தியாகும்.

இந்தத் தகவலை நோர்வே அனுசரணையாளர்கள் ஜனாதிபதிக்கு உடனடியாகத் தெரிவித்தனர். எனினும், ஜனாதிபதி அதற்குப் பதிலே கூறாமல் ஒதுங்கிக்கொண்டார் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(எ-க)

## சமாதானத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றார் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரான டாக்டர் ராஜித சேனாரத்ன.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இப்படிக் கூறினார்.

இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக ஜனாதிபதி அனுப்பிய மாற்றுத் திட்டத்தை விடுதலைப் புலிகள் நிராகரித்துவிட்டனர். அதேவேளை, புலிகளும் பேச்சை விரைவுபடுத்துவது தொடர்பான தமது ஆலோசனைகள் நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளனர். இது தொடர்பாக ஐ.தே.கவின் நிலைப்பாடு என்ன? - என்று செய்தியாளர்கள் கேட்டனர்.

பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும். புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைவின் அடிப்படையில்தான் அது ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதில் ஐ.தே.கவுக்கு எந்த மாற்றுக் கருத்துகளும் இல்லை.

ஆனால், ஜனாதிபதிக்கோ பேச்சை ஆரம்பிக்கவேண்டும் என்ற நோக்கமே இல்லை.

ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷி, நோர்வே அனுசரணையாளர்களான எரிக் சொல்ஹெய்ம், பிரதி அமைச்சர் விடார் ஹெல்கிஸன் மற்றும் அமைச்சரான பீற்றர்ஸன் என சமாதானத் தூதுவர்கள் ஒருவர் மாறி ஒருவராக இங்குவந்து சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் ஒன்றும் வேலை இல்லாதவர்கள் அல்லர். பொறுப்பான கடமைகளில் இருப்பவர்கள்.

ஆனால், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவர்களுக்கே தண்ணிகாட்டிவிடுகின்றார். ஜனாதிபதிக்குத் தேவை காலத்தைக் கடத்த வேண்டும் என்பதே.

அதற்காக எதை எதையோ பிதற்றுகின்றார். இன்று 'ஆம்' என்றால் நாளை 'இல்லை' என்கிறார். இன்று ஒத்துக்கொண்டார் என கூறும் ஜனாதிபதி, நான் அப்படி ஒருபோதும் ஒப்புக்கொள்ளவில்லை என்று அடுத்த நாள் அடித்துக் கூறுகின்றார்.

சந்தர்ப்பத்திற்கேற்ப இவர் பேசும் பேச்சுகளும் வெளிப்படுத்தும் கருத்துக்களும்தான் இன்று சமாதானப் பேச்சைக் கேள்விக் குறியாக்கியுள்ளன. இவருடைய ஆட்சிக்காலத்தில் சமாதானப் பேச்சு ஆரம்பிக்கப்படும் என்ற நம்பிக்கை எமக்கு சிறிதும் இல்லை. - என்று டாக்டர் ராஜித்த சேனாரத்ன கூறினார்.

(எ-க-13)


அதிவேக அதிரடி வெளியீடு




O/L, தரம் 9 மாகாண மட்ட பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களிற்கான முற்றிலும் எதிர் பார்க்கும் மாதிரி வினாத்தாள்

ENGLISH

Past Papers (2001, 2002, 2003) With Answers

தொகுப்பு: த. தனேந்திரன்

B.COM. (Hons). M.M.SPI, H.N. Dip-In Acc. P.G.Dip.In.Edu.

பகுதிநேர விரிவுரையாளர் (ஆங்கிலம்) தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்.

கிடைக்கும் இடங்கள்: [illegible]


## மரண அறிவித்தல்

### திருமதி சண்முகராசா சிவபாக்கியம்



தாவடி தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சண்முகராஜா சிவபாக்கியம் அவர்கள் நேற்று (14.11.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா சண்முகராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவராசமலர் மற்றும் செல்வராணி, ஜெயமலர் (ஜேர்மனி), தேவி, நாகேஸ்வரன், பத்மாவதி, சோதிமலர், தனலட்சுமி, காலஞ்சென்ற தர்மபாலன் (ஜேர்மனி), சாந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற செல்வரத்தினம், குலசிங்கம் மற்றும் பரராஜசேகரம் (ஜேர்மனி), அரியமலர், கந்தசாமி (உரும்பிராய்), காலஞ்சென்ற தர்மலிங்கம் (உடுவில்), இரவீந்திரராசா (வாதரவத்தை), மிபாகரன் (ரற்றர்-ஜீவா - புளியங்கூடல்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2004) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாடசாலை லேன்,*
*தாவடி தெற்கு,*
*கொக்குவில்.* (38636)(32-16-17)

தகவல்:
நாகேஸ்வரன் (மகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.11.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.